Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 15 திங்கட்கிழமை (31.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 224

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## வெட்டுக்காயங்களுடன் சடலம் நாச்சிமார் கோவிலடியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை நாச்சிமார் கோவில் பகுதியிலுள்ள கடையொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் நேற்றுக் காலை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன் (வயது 36) என்பவரே வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் நாச்சிமார் கோவில் கே.கே.எஸ். வீதியில் உள்ள விநாயகர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் என்றும் தெரியவந்துள்ளது.

யாழ்.மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.(ந-15,133)

## பருத்தித்துறை நகரப் பகுதி நேற்று பாரிய சுற்றிவளைப்பு

(துன்னாலை)

பருத்தித்துறை நகரை அண்டிய பகுதிகள் நேற்று அதிகாலை 4 மணிமுதல் பாரிய எடுப்பில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் நகரின் வழமை நிலை பாதிப்பிற்குள்ளாகியது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைசாலையை மையமாக வைத்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டதால் சாலை ஊழியர்கள் எவரும் அலுவலகத்திற்கு கடமைக்குச் செல்ல முடியவில்லை.

மேற்படி சுற்றிவளைப்பின்போது 250 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள், குடும்பஸ்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டு பகல் ஒரு மணியளவில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையில் இல்லை!

## கண்காணிப்புக்குழு அறிவிக்கவேண்டும்–எழிலன் கடிதம்

(திருகோணமலை)

**போர்நிறுத்த உடன் படிக்கை நடைமுறையில் இல்லை என்பதை கண்காணிப்புக்குழு அறிவிக்கவேண்டும்.**

இவ்வாறு விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்தில் கேட்டுள்ளார்.



கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு எழிலன் எழுதிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க்கந்தன் கொடியேற்றம் வெள்ளம்போல் அடியார் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் நேற்றுக் காலை நடைபெற்றது. கொடியேற்றத்தைப் பார்ப்பதற்காக இலட்சக்கணக்கான அடியார்கள் ஆலயத்தில் கூடினர்.

கடந்த வருடங்களை விட இம் முறை கொடியேற்றத்திருவிழாவைக் கண்டு தரிசிக்கக்கூடிய அடியார்களின் எண்ணிக்கை அளவு கடந்திருந்ததாகக் (10 ஆம் பக்கம் பார்க்க)



## யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு உரியவர்களே முடிபு கட்ட வேண்டும்

### கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் கைச்சாத்திட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை முடிபிற்கு கொண்டுவர போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவிற்கு அதிகாரமில்லையென அக்குழுவின் பேச்சாளர் தொர்பின் ஒமர்சன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் கண்காணிப்புக் குழுவிற்கு எழுதியுள்ள கடிதம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை சம்பந்தப்பட்ட தரப்புக்களே முடிபிற்கு கொண்டு வர முடியுமெனவும் இந்நிலையில் விடுதலைப் புலிகளின் கடிதம் தொடர்பாக கண்காணிப்புக்குழு அழமாக ஆராயப்போவதில்லை எனவும் ஒமர்சன் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## 3 தாலிக்கொடி; 6 சங்கிலி நல்லூரில் அறுத்தெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயக்கொடியேற்றத்திற்கு வந்த பக்தர்களிடம் இருந்து 3 தாலிக்கொடிகளும், ஆறு சங்கிலிகளும் திருடர்களால் அறுத்தெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் இலட்சக்கணக்கான அடியார்கள் திரண்டதால் ஆலய உள்வீதியில் சன நெருக்கடி ஏற்பட்டது. இதனை சாதகமாக பயன்படுத்திய திருடர்கள் தமது கைவரிசையைக்காட்டியுள்ளனர்.

பறிகொடுத்தவர்கள் யாழ்.மாநகர சபையின் உற்சவகால பணிமனையில் முறையீடு செய்துள்ளனர். திருட்டுப்போன நகைகளின் எடை சுமார் 40 பவுண் எனத்தெரிவிக்கப்படுகிறது. (ந)

## உப அதிபர் மீது துப்பாக்கிச்சூடு

# யாழ்.பாடசாலை மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி உப அதிபர்மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கான அழைப்பை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது. அவ்வமைப்பு விடுத்துள்ளசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.கே.கே.எஸ்.வீதியில் யாழ்.இந்துக் கல்லூரி உப அதிபர் கிருஷ்ணகுமார் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

இராணுவத்தின் இத்தகைய செயற்பாட்டினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இராணுவ ஆக்கிரமிப்பால் அல்லல்பட்டுள்ள கல்விச் சமூகத்தினருக்கு இராணுவம் விடுத்த அச்சுறுத்தலாகவே இது அமைந்துள்ளது.

குடாநாட்டு மாணவர்களதும் ஆசிரியர்களதும் பாதுகாப்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராயில் இளைஞன் சுட்டுக்கொலை

(உரும்பிராய்)

உரும்பிராய்ப் பகுதியில் இனம் தெரியாத நபர்களினால் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 8 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் சி.கபில்ராஜ் (வயது 18) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பிரஸ்தாப இளைஞர் சிவகுல வீதியூடாக தனது நண்பரின் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தவேளை பற்றைக்காடு ஒன்றிற்குள் மறைந்திருந்த இனம்தெரியாத நபர்கள் அவரைச் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். (ந-5,49)

# நிர்க்கதியான குழந்தைகளின் நிராதரவான நிலை

(கொழும்பு)

யுத்தம், சுனாமி அனர்த்தம் காரணமாக வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பெருமளவிலான சிறுவர்கள் நிர்க்கதியாகி உள்ளனர். வடக்கு–கிழக்கில் 168 சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் 8500 சிறார்கள் பராமரிக்கப்பட்டு வருவதாக சமூக சேவைகள் திணைக்களப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட அரச கட்டுபாடற்ற 125க்கு மேற்பட்ட சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாது செயற்பட்டு வருகின்றன. ஆழிப் பேரலையின் போது 741 குழந்தைகள் தாய் தந்தைகள் இல்லாது அனாதைகளாகியுள்ளதையும் 2800 குழந்தைகள் தந்தையோ அல்லது தாயையோ அல்லது இருவரையும் இழந்து நிர்க்கதியாகி உள்ளனர் என்று மதிப்பீடுகளில் இருந்து தெரியவருகின்றது.

சில குழந்தைகளை தெரிந்தவர்கள் எடுத்து வளர்த்து வருகின்றார்கள் சில குழந்தைகள் வெளிநாடுகளுக்கு விற்பனையாகி உள்ளதாகவும் சொல்லப்படுகின்றது. நிர்க்கதியான சிறார்களை பராமரிப்பதற்குதிணைக்களத்தில்போதுமான நிதி உதவிகள் இல்லை. ஆனால் பிரதேச மட்டத்தில் விபரங்களை சேகரிப்பதற்கும் அவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதா என்பதைக் கண்காணிப்பதற்கும் மட்டும் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த வரிசையில் குழந்தைகள் விற்பனை செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு எடுத்து செல்லப்படுகின்றனர். உள்நாட்டில் விற்பனை செய்யப்படுவதுடன் மத மாற்றங்கள் செய்யப்பட்டு வருவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியவில்லையா? என்று சமிபத் தில் அம்பாறை மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த வடக்கு–கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ் தங்கராஜாவிடம் மாவட்ட் புத்தி ஜீவிகள் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (து–9)

## துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் அதிகாரி காயம்

(வவுனியா)

நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

வவுனியா மன்னார் வீதியில் நெல்லிக்குளம் பகுதியில் 7.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.உடுவில் பகுதியில்நேற்றுமுன்தினம் இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. பொதுமகன் ஒருவர் கொடுத்த தகவலையடுத்தே இவற்றை மீட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (து–9)

## மின்சாரசபை ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

சம்பள மீளாய்பு தொடர்பான தரவுகளை வழங்குவதை மின்சார சபை தாமதப்படுத்துவதால் அந் நடவடிக்கைகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர்ஜோன்செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கான தரவுகளை துரித கதியில் பெற்றுத் தருமாறு மின்சார சபையிடம் கேட்டுக்கொண்டதாக எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். மின்சார சபை ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்யும் பொருட்டு 5 பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு சிபார்சுகளும் முன்வைக்கப்பட்டன.

மின்சார சபை ஊழியர்களுக்கான சம்பள மீளாய்வு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறுவதுடன் கடைசியாக மீளாய்வு 2003ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைய இவ்வருடத்திற்குள் மின்சாரசபை ஊழியர்களின் சம்பளம் மீண்டும் மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளது. சம்பள மீளாய்வு நடவடிக்கைகள் பூர்த்தியாகும்வரை மின்சார சபையிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி விசேட கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தையொன்றைதொழிற்சங்கப்பிரதிநிதிகளுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (து–9)

## இராசி பலன்

**31.07.2006**
**(ஆடி 15, திங்கட்கிழமை)**
**சஷ்டி முன்னிரவு 8.49 மணிவரை**
**அத்தம் பிற்பகல் 3.33 மணிவரை**
**இராகுகாலம் 7.33–9.03 மணிவரை**
**சுபநேரம் 12.03–1.33 மணிவரை**
**சஷ்டி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், நோய் குணமடைதல், சுவாரஸ்யம், தனசேர்க்கை. |
| இடபம் | குடும்பக்கவலை, காரிய இடையூறு, ரோகநிலை, மரியாதைக்குறைவு. |
| மிதுனம் | மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம், மாதா சுகம், பொருள்விரயம். |
| கடகம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, பிரயான நன்மை, கீர்த்தி. |
| சிங்கம் | பொருள் விரயம், முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு, குடும்பக்கவலை. |
| கன்னி | நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, சுப செய்தி, தெய்வசிந்தை. |
| துலாம் | உறவினர் மனஸ்தாபம், ஆரோக்கியக் குறைவு, பொருள்விரயம், பிரயாணம். |
| விருச்சிகம் | குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம், முயற்சி கைகூடும், புகழ். |
| தனுசு | கடின உழைப்பு, எடுத்த காரியம்கைகூடும், மேன்மை, போசனசுகம். |
| மகரம் | கட்டுப்பாடு, அமைதிக்குறைவு, பணவிரயம், வேலைச்சுமை. |
| கும்பம் | குடும்பக்கவலை, முயற்சி தாமதம், அபகீர்த்தி, போசனசுகம். |
| மீனம் | தொழில் நன்மை, காரிய அனுகூலம், பெருமையடைதல், உறவினர் வருகை. |

- வளவன்

## பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தக ஒப்பந்தம் வலுவடைந்துள்ளது

(கொழும்பு)

தமது பதவிக்காலத்தின் போது பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் வலுவடைந்துள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக ஒப்பந்த மொன்றை மேற்கொண்டிருப்பது இலங்கையுடன் மட்டுமே. இதுவரையும் எந்தவொரு தடையையும் இன்றி இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தனது பதவிக்காலம் நிறைவு பெறுவதை முன்னிட்டு ஊடகங்களுக்கு விளக்கமளிப்பதற்காக கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பாகிஸ்தான் தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒருமைப்பாட்டை தமதுநாடு மதிக்கின்றது. இலங்கையின் சுகாதார மற்றும் கல்வித்துறையின் வளர்ச்சிக்கு பாகிஸ்தான் அரசு பல திட்டங்களை விடுத்துள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ–9)

## உங்கள் முன்னால் குண்டுகள்வீசப்படுகின்றன கண்காணிப்புக்குழு தலைவரிடம் கேள்வி


உங்கள் கண்முன்னாலேயே குண்டுகள் வீசப்படுவதை பாருங்கள். இது தொடர்பாக என்ன கூறப் போகின்றீர்கள் என்று திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக சி.எழிலன் கொழும்பு ஊடகமொன்றுக்கு கூறுகையில்,

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுடன் கடந்த வியாழக்கிழமை பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தேன். எமது அலுவலகத்திற்கு 750 மீற்றர் தூரத்தில் விமானப்படை விமானங்கள் குண்டுகளை வீசின. உங்கள் கண்முன்னாலேயே குண்டுகள் வீசப்படுவதை பாருங்கள் இது தொடர்பாக என்ன கூறப்போகின்றீர்கள் என்று உல்ப் ஹென்றிக்சனிடம் கேட்டேன். உண்மை நிலைகளை தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறினேன்.

அரசாங்கத்துடன் பேசி முடிவெடுத்துவிட்டு வாருங்கள் என்று கூறி பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு அவரை வழியனுப்பிவிட்டேன் என்றார். உல்ப் ஹென்றிசனுடனான சந்திப்பில் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (து)

## நல்லூரான் திருவடிக்கு இன்று இரண்டாம் திருவிழா



## தமிழாலே உனைத் தொழுவோம் தலைவா!

தருவேங்கை மரமாகி தள்ளாடும் இழமாகி
பெரு வேடனாக வந்த பெருமானே நீ அருள்வாய்

*அனுபல்லவி*

அரு மாமறைகள் போற்றும் ஆறுமுகனே முன்னர்
குற மாமகளை வேண்டி குறும்புகள் செய்ய அன்று

*சரணம்*

அழகான மயில்மீது எழில்மாதர் புடைசூழ
நல்லை நகர் கந்தனே நீ அருள்வாய்
விழுநீரும் சொரிபாய வேலவனே உன்னைத்
தமிழ்பாடிப் போற்றிட தண்ணருள் நல்கிடுவாய்

துரியாதரன்-துஷ்யந்தி (துளசி)

## நல்லூர் முருகன் பாமாலை

எத்தனை அலங்காரம் நல்லூர் முருகனுக்கு
சக்தியின் பிள்ளை சரவண முத்துக்கு
எத்தனை அலங்கரம்
சித்தம் போற்றும் சிவனார் பிள்ளைக்கு
எத்தனை அலங்காரம்
குழந்தை அலங்காரம் கோடிப்புன்னகை
கூடும் அலங்காரம்
மழலை அலங்காரம் மங்கையர் தாலாட்டி
மகிழும் அலங்காரம்
குமரன் அலங்காரம் கோதையர் இருவர்
கொஞ்சும் அலங்காரம்
வேலன் அலங்காரம் வேல் கொண்டு
சூரனை வீழ்த்தும் அலங்காரம்
மலர்கள் அலங்காரம் மங்களம் தருகின்ற
மகிழ்ச்சி அலங்காரம்

*சின் கந்தையா பொன்னாவலை*

## ஆதிவேலனே காத்தருளே!

ஆயிரத்து ஐம்பத்து எட்டு ஆண்டு முன்வாழ்
ஆதிகோவில் நல்லூரானே ஆதிவேலனே ஆண்டருளே
பாயிரம் பதிவரலாறு பாமாலை ஆதி ஆட்சியோனே
பண்சுருதி மந்திரம் பாடல்தாள நாதசுரனே
தாயிலும் நீ நல்தலைவா தெய்வ முத்துக் குமரா
தமிழ்வாழ் தமிழ்தேவே தமிழோடு நீ இசைநாதனே
நாயில்வரு வைரவரோடு மயிலில் தரு குகனேவா
நம்மை நீயே காத்தருளே நல்லூர்க் கந்தனேவா.

*நல்லூர் சிவமுருகன் என்-தமிழ்மகன்-*

## அருளூற வாழ்ந்திடுவோம்

*மயிலேறும் பெருமானை*
*வள்ளி மணாளனை*
*வேணடிப் பணிந்திடுவோம்!*
*கையினில் வேலேந்தும்*
*குமரனைக் கையேந்த*
*காலம் களித்திடுவோம்!*
*தையலர் புடை சூழ*
*தெருவீதி வருவோனை*
*தேடிவரம் பெறுவோம்!*
*ஐயனை நல்லை நகர்*
*அழகனை நாடியே*
*அருளூற வாழ்ந்திடுவோம்!*

அரியாலையூர் சி.சிவதாசன்

## தந்திடுவாய் நிம்மதி!

கோலமயில் ஏறிவருங் குமரனே
குஞ்சரனுக் கிளையவனே முருகனே
ஆலமுண்ட சிவனாரின் மைந்தனே
ஆறு படை வீடமர்ந்த கந்தனே
காலமிட்ட கட்டளையா தமிழினம்
கலங்கி நிதம் வாழுவது எங்ஙனம்
சீலமுடன் வந்தடியார் சந்நிதி
தேடுகின்றார் தந்திடுவாய் நிம்மதி!

*கவிஞர் நயினை இராகுலன்*

# ஜெனீவா உடன்படிக்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும் இருதரப்பினருக்கும் பிரி.ஸ்தானிகராலயம் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் மனிதக் கொலைகள், வன்முறைகள், வதைகள் மற்றும் சிறைபிடித்தல் போன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டுமென்று ஐக்கிய இராச்சியம் வலியுறுத்தியுள்ளது.

புலிகளின் தலைமையுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிக அதிகாரிகளுக்குமிடையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது நாட்டின் தற்போதைய நிலைமைகள், பொதுமக்கள் மீதான அதன் விளைவுகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு போன்றவற்றின் மீது கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவா பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை இரண்டு தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டுமென்று உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் நோர்வே சமாதானப் பணியாளர்கள் மற்றும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு தமது ஆதரவை வழங்கவிருப்பதாக அவர்கள் உறுதியளித்துள்ளார்கள்.

பிரச்சினைகளை தீர்த்து புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்தப் பேச்சுவார்த்தையையும் இருதரப்பினரும் தட்டிக்கழிக்கக் கூடாது என பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-9)

## சுட்டுக் கொலை

வேலணைத் துறையைச் சேர்ந்த கந்தையா சிவபாலன் (வயது 42) கடந்த 27 ஆம் திகதி இரவு 8.30மணியளவில் வேலணைச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (து-15)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி தேவஸ்தானத்திலும், மாலை 5.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதஸ்வாமி தேவஸ்தானத்திலும், நல்லூர் சிவன் கோயிலிலும் ஆலய அறங்காவலர்களின் அனுசரணையுடன் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை கொண்டாட உள்ளனர். (அ-9)

# தனியார் பஸ் சேவை நிறுவனம் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவையில் இடம்பெறும் குறைபாடுகளை அடையாளம் கண்டு நன்மையளிக்கின்ற போக்குவரத்துச் சேவையை நாட்டில் ஏற்படுத்துவதற்கான யோசனையை முன்வைப்பதற்கு நியமிக்கப்பட்ட குழு இன்று ஜனாதிபதியை சந்தித்துப் பேசவுள்ளது.

அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி நியமித்த குழுவிற்கு நிதியமைச்சின் செயலாளர் டி.பி.ஜெயசுந்தர தலைமை தாங்குகின்றார். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் போக்குவரத்துச் சேவையின் தலைவர் மாகாண போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் தனியார் பஸ் கம்பனிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

கடந்த பல மாதங்களாக இந்தக் குழு பல கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் புதிய யோசனைகள் அடங்கிய அறிக்கையொன்றையும் தயாரித்துள்ளது.

இது தொடர்பில் தனியார் பஸ் உரிமையாளர்களும் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

நிறுவனத்தை ஸ்தாபிப்பது தொடர்பில் சர்வதேச நாடுகளின் அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு விசேட பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் கொங்கொங் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-9)

# மூவர் கைது செய்யப்பட்டதாக ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேலணை 2ஆம் கட்டையைச் சேர்ந்த கந்தையா குகனேஸ்வரன் (வயது 37), நயினாதீவைச் சேர்ந்த சாம்பசிவம் பிரகலாதன் (வயது 25), நயினாதீவு 5ஆம் கட்டயைச் சேர்ந்த நவரத்தினம் சாந்தன் (வயது 31) ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டதாக அவர்களது உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்களில் கந்தையா குகனேஸ்வரன் என்பவர் வேலணை கல்வித் திணைக்களத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-15, 133)

# கொழும்பில் சில வீதிகள் விரைவில் போக்குவரத்துக்கு இடைநிறுத்தப்படும்

(கொழும்பு)

கொழும்பு நகர வாகன போக்குவரத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

கொழும்பு நகர வாகன போக்குவரத்து தொடர்பாக சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் சில வீதிகள் போக்குவரத்திற்கு முற்றாக இடைநிறுத்தப்படுவதுடன் வாகனங்கள் தரிப்பதற்கும் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன்.

இந்த புதிய போக்குவரத்து மாற்றங்கள் தொடர்பான விபரம் பின்னர் தெரிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை ஜனாதிபதி மாளிகைக்கு மாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சிறப்புத் தூதுவராக சந்திரிகா?

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனானின் சிறப்புத்தூதுவர் பொறுப்பை பெறுவதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீவிரம் காட்டி வருவதாக தெரிகிறது.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து வெளிவிவகார அமைச்சுக்கு இது தொடர்பிலான கருத்து கேட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தை மஹிந்தவிடம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒப்படைத்துள்ளார்.

சந்திரிகாவின் நியமனத்துக்கு ஒப்புதல் வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சந்திரிகாவின் நியமனம் தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் போதுதான் அவரது பணி குறித்த முழு விவரங்களும் வெளியாகும் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது பிரித்தானியாவில் உள்ள சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதி நாடு திரும்பக்கூடும் என்று கூறப்படுகிறது. (அ-9)

## ஆங்கில தினப் போட்டிகள்

இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த வேலணைக் கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை செவ்வாய்க்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறும் என வேலணைக் கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர் கோ.தில்லைநாதன் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளில் 1, 2ஆம் இடங்களைப் பெறும் மாணவர்களை 3ஆம் திகதி வியாழக்கிழமை யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவிருக்கும் வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் கலந்துகொள்ளுமாறு வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# புனர்வாழ்வு அமைச்சின் புறக்கணிப்பால் மாவில ஆற்றுநீரை மக்கள் வழிமறித்தனர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதி மக்களுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கி நீர் விநியோகச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்த முடியாது என்று சிங்கள அரசு அறிவித்தமையால்தான் மாவில ஆற்றுநீரை மக்கள் வழிமறித்தனர் என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து எழிலன் கூறியுள்ளதாவது,

எங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளைச் சேர்ந்த 12 கிராம மக்களுக்கான குடிநீர் நிலைமை மிக மோசமாக உள்ளது. தொடர்ச்சியாக அந்தக் கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருந்தன. இது குறித்து அண்மையில் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினோம்.

அச்சந்திப்பின் போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதாகத் தெரிவித்தனர். எங்களுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் நீர் பிரச்சினை இருப்பதால் எங்கள் பகுதியிலும் அத்தகைய நீர் விநியோகத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கூறினோம்.

ஆனால் அதன் பின்னர் வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், விடுதலைப் புலிகளின் பகுதியில் நீர் விநியோகிக்கும் திட்டம் செயற்படுத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தச் செய்தியை அறிந்த மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்று கூடி ஆலோசித்தனர்.

எங்களுடைய பகுதிகளிலிருந்து தான் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நீர் விநியோகம் செல்கிறது. எங்களை சிறிலங்கா அரசாங்கம் புறந்தள்ளி வைத்திருப்பதன் காரணமாக எங்களிடத்தில் பாராமுகமாக இருப்பதன் காரணமாக ஆற்று நீரை வழிமறித்து எங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று மக்கள் பிரதிநிதிகள் தீர்மானித்தனர். அதன்படி வழிமறிக்கப்பட்டது.

மாவில ஆறு பொதுமக்களால் கடந்த 20 ஆம் நாள் வழிமறிக்கப்பட்டது. மக்களைப் பொறுத்தவரையில் எல்லாவற்றிலும் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்த நீரைத் திறந்துவிடுவதில் எதுவித அர்த்தமும் இல்லை என்று மக்கள் கருதுகின்றனர்.

இப்போது மக்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமாக இருந்தால் மட்டுமே நாங்கள் ஆற்றுநீரைத் திறந்துவிட முடியும் என்ற செய்தியோடு மக்கள் உள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கத் தரப்பு தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும் நேரத்திலும் நீரைத் திறந்து விடுவதற்கான யுத்த நடவடிக்கையைத் தொடங்கியுள்ளனர்.

நாங்கள் எதனை இழந்தாலும் பரவாயில்லை. உரிமைகளைத்தானே கேட்டோம் என்று மக்கள் கருதுகின்றனர். இது மக்களின் மனிதாபிமான பிரச்சினை. மக்களுக்கான உணவுத் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பிடங்களிலே வாழமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. போக்குவரவும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த நிலைமைகளின் பின்பும் அப்படியான வாழ்க்கை வாழமுடியாது. ஆகையால் யுத்தத்தைச் செய்து ஒரு தீர்வுகாண வேண்டும் என்ற நிலையில் மக்கள் தயார் நிலையில் நின்றுகொண்டிருக்கின்றனர்.

மக்களின் உரிமைப் பிரச்சினை இது. மக்கள் தங்களுக்கான உரிமைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இதை மீறில் யுத்த நடவடிக்கையை அரசாங்கம் தொடருமேயானால் பதில் தாக்குதலை நடத்த நாங்கள் தயாராக உள்ளோம் என்பதுதான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. (அ)

# வவுனியா வளாக சிங்கள மாணவர்களை வேறு இடங்களுக்கு மாற்றத் தேவையில்லை

## பல்.மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவர்களை வேறு பல்கலைக்கழகத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வவுனியா வளாக மாணவர்களுக்குத் தேவையான போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் வவுனியா வளாகத்திற்கு விஜயம் செய்து இதுதொடர்பாக ஆராய்ந்துள்ளார். இந்த விஜயத்தின் போது மாணவர்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழக அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

அங்கு தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்றும் அதனால் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு தம்மை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் வவுனியா வளாகத்தில் கல்வி கற்கும் சிங்கள மொழி மூல மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த வேண்டுகோளை கருத்தில் கொண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் மற்றும் கிழக்கு பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் கற்கும் சிங்களமொழி மூல மாணவர்களை மாற்றுவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இந்த மாணவர்கள் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற வேண்டுகோள்களை முன்வைத்திருக்கக்கூடுமென்று பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

## இன்று ஒரு தகவல்

# இரும்பு மனிதர்

ஒரு நீதிமன்றம். அங்கே ஒரு கொலை வழக்கு சம்பந்தமான விசாரணை நடந்து கொண்டிருக்கிறது அந்த வழக்கறிஞர் ரொம்பத் தீவிரமா வாதாடிக் கொண்டிருந்தார்.

தன்னுடைய கட்சிக்காரர் நிரபராதி என்கிறது அவருக்கு நன்றாகத்தெரியும் அதனாலேதான் அவர் சார்பா வாதாடுவதற்கு ஒத்துக்கொண்டார்.

அப்படி அவர் மும்முரமா வாதாடிக்கிட்டிருக்கிற சமயத்திலே... அவசரமா தந்தி ஒன்று வந்து சேர்ந்தது. அதை வாங்கி படித்துப்பார்த்தார்.... அதற்கு பிறகு அதை மடித்து தன்னுடைய கோட்டுப்பபை யிலே வைத்துவிட்டு தொடர்ந்து வாதாட ஆரம்பித்தார். பேசி முடித்தார்.

அதுக்கப்பின்பு அங்கே கோர்ட்டுலே இருந்த சக வக்கீல்கள் அவரிடம் வந்தார்கள்.

"நந்தி ஒன்று வந்ததே.... என்ன விஷயம்?" என்று விசாரித்தார்கள் அவர் சொன்னார்,

ஊரிலே சிகிச்சைக்காகப் போயிருந்த என் மனைவி இறந்து போனதாக தந்தி வந்திருககிறது!" என்றார்.

மற்ற வக்கீல்களுக்கு அதிர்ச்சி!

"என்ன இது.... மனைவி இறந்ததை விட கேஸ் முக்கியமா?" என்று கேட்டார்கள்.

"இறந்து போன என் மனைவி மறுபடியும் திரும்பி வரப்போறதில்லை... ஆனா என் கட்சிக்காரர் ஒரு கொலை வழக்கிலே மாட்டிக்கொண்டார் அவரோ நிரபராதி. அவர் உயிரை நான் காப்பாற்ற வேண்டாமா? இது தான் என் கடமை!" என்றார்.

இப்படி இவர் சொன்னதும் எல்லாரும் அப்படியே திகைச்சுப்போய் நினறார்களாம்.

சரி... கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்த அந்த வழக்கறிஞர் யார் தெரியுமா?

அவர் தான் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல் குஜராத் மாநிலத்திலே 1875 அக்டோபர் 31 அன்றைக்கு ஜாவேரிபாய் என்பவருக்கு நாலாவது பிள்ளையாக அவர் பிறந்தார். இந்த ஜாவேரிபாய் யார் தெரியுமா?

ஜான்சிராணி லட்சுமிபாய் போர்ப்படையிலே ஒரு வீரராகப் பணிபுரிந்தவர்.

இளம் வயதிலே வல்லபாய் படேல் ரொம்ப சிரமப்பட்டுப் படித்தார். விடாமுயற்சி வெற்றியைக் கொடுத்தது. கல்லூரியிலேயும் காலடி வைத்தார்... அப்புறம் வக்கில் பட்டத்தையும் பெற்றார்.

பிரிட்டிஷ் ஆட்சி நடந்துகொண்டிருந்த சமயம் குஜராத்தைச் சேர்ந்த பர்டோலி தாலுக்காவிலே விவசாயிகள் மீது அரசாங்கம் திடீரென்று நிலவரியை உயர்த்தியது....

ஏழை விவசாயிகள் ரொம்பக் கஷ்டப்பட்டார்கள் அரசாங்கம் வரிசெலுத்தாத விவசாயிகளின் நிலங்களை ஜப்தி செய்தது... அரசாங்கத்தை எதிர்க்கிறவர்களை கைது பண்ணி சிறையிலே அடைத்தது. சிலபேர் வீடுவாசல் ஆடு, மாட்டையெல்லாம் விற்று கூட வரி கட்டவேண்டிய நிலைமைக்கு ஆளாகிவிட்டார்களாம்.

வழக்கறிஞர் வல்லபாய்படேல் நிலவரியை உடனே ரத்து செய்யவேண்டும் என்று பம்பாய் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதினார். எந்தப் பலனும் இல்லை உடனே எல்லா விவசாயிகளையும் அணிதிரட்டினார். அதுக்குதானே தலைமை தாங்கினார் சத்தியாக்கிரகம் நடத்தினார்.

அந்தப் பகுதியிலே எந்த வேலையும் நடக்கவில்லை! வேறு வழியில்லை... ஆட்சியாளர்கள் உடனே வரியை ரத்து பண்ணினார்கள்... சிறையிலே இருந்தவர்களையெல்லாம் வெளியிலே விட்டார்கள்.

1928, ஆகஸ்டு- 6 சர்க்காருக்கும் விவசாயிகளுக்கும் இடையிலே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. நிலைமை சரியாகிவிட்டது.

வல்லபாய்படலேன்...பொது சேவையைப் பாராட்டிய பொதுமக்கள் அவருக்கு சர்தார் என்கின்ற பட்டத்தைக்கொடுத்தார்கள் சர்தார் என்றால் தலைவர் அல்லது தளபதி என்று அர்த்தம்.

இரும்பு மனிதர் என்று இவருக்குப்பெயர்... இருந்தாலும் நகைச்சுவை உணர்வும் நிறைய உண்டு.

ஒரு தடவை ஒரு பத்திரிகை நிருபர் வந்திருக்கிறார். சர்தார்படேலிடம். அவருக்குப் பிடிச்ச பண்பாடு கலாசாரம் எது என்று கேட்கவேண்டும் என்று ஆசை அதனாலே அவரைப்பார்த்து "உங்களுக்குப் பிடித்த கல்ச்சர் (Culture) எது?" அப்படி என்று கேட்டார் இதுக்கு சந்தர் படேல் எனக்குப் பிடித்த கல்ச்சர் அக்கரிகல்ச்சர்!" அப்படி என்றாராம்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வான்வெளித்தாக்குதல் தவறான அணுகுமுறை கண்காணிப்புக்குழு தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழர் தாயகப் பகுதி மீது படையினர் தொடுத்துள்ள வலிந்த தாக்குதல்கள் கொழும்பு நகரம் தாக்கப்படுவதற்கு வழிகோலும் என கண்காணிப்புக்குழு எச்சரித்துள்ளது. நேற்று முன்தினம் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியில் உல்ப் ஹென்றிக்சன் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாவிலாற்றுப் பிரச்சினையை காரணம் காட்டி தரை, வான்வெளிகளில் அரசாங்கம் தொடுத்துள்ள வலிந்த தாக்குதல்கள் தவறான அணுமுறை என கண்டனம் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து இரு தரப்பினரும் அதிகாரபூர்வமாக விலகாததால் அதனை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் பேச்சை ஆரம்பிக்க முடியும் எனினும் தற்போதைய போர்நிறுத்தத்தில் இருந்து இரு தரப்பினரும் பலதூரத்திற்கு சென்றுவிட்டார்கள்.

நீரைப்பெறுவதைக் கொண்டு வலிந்த தாக்கு தலைத் தொடுத்துள்ளதன் மூலம் தவறான பாதையில் அரசாங்கம் செல்கிறது. உண்மையில் நீரைப்பெறுவதில் அரசாங்கம் விருப்பம் கொண்டிருந்ததால் வலிந்த தாக்குதலைத் தொடுப்பது பொருத்தமற்ற செயலாகும்.



அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றபின்னரே நாம் வெருகல் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சந்திப்பை மேற்கொண்டோம். அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்குமாறு நாம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வலியுறுத்தினோம். ஆனால் நாம் பேசிக்கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா வான்படை விமானங்கள் எமக்கு அருகில் குண்டுகளை வீசின். என்னைப் பொறுத்த வரை முழுஅளவிலான யுத்தத்தை ஆரம்பிக்கும் வல்லமையை இரு தரப்பினரும் கொண்டிருக்கவில்லை. தற்போதைய வன்முறைகளை மட்டுமே இரு தரப்பினராலும் அதிகரிக்க முடியும். எனினும் நிலைமையை அரசாங்கம் கட்டுப்படுத்தத் தவறினால் கொழும்பில் தாக்குதல்கள் நடப்பதை தடுக்க முடியாது எனத் தெரிவித்தார்.

பின்லான்ட் ,டென்மார்க் ஆகிய நாடுகளைப் போன்று கண்காணிப்புக்குழுவிலிருந்து வெளியேறும் முடிவை சுவீடனும் எடுக்கும் பட்சத்தில் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் செயலிழந்துபோகும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (அ)

# மக்களுடைய விடுதலைச் சிந்தனையை மழுங்கடிக்கும் அரசின் சகல முயற்சிகள் தோல்வி கண்டுவிட்டன

(கொழும்பு)

தமிழ் மக்களுடைய விடுதலைச் சிந்தனையை மழுங்கடிக்கலாம் என்ற நோக்கில் ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளும் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளும் தோல்வி கண்டுள்ளன என்று தூயவன் அரசறிவியற் கல்லூரி முதல்வர் அரசண்ணா தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி வட்டக்கச்சி தமிழவன் பயிற்சிப் பாசறையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றமாவடிப்பிரதேச மக்களுக்கான கட்டுமாணப் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தனதுரையில் கூறியதாவது,

தமிழ்மக்களுடைய நிலங்களைக் கைப்பற்ற வேண்டும் அவர்களுடைய் தாயகக் கோட்பாடு சிதைக்கப்பட வேண்டும் அவர்களுடைய விடுதலைச் சிந்தனை மழுங்கடிக்கப்படவேண்டும் என்ற வகையில் தான் ஸ்ரீலங்கா அரசின் சகல செயற்பாடுகளும் நிகழ்ந்தேறி வருகின்றன.

ஆனால் இதற்குமாறான நிலைமை தான்தமிழ் தாயகத்தில் இருக்கின்றது. விடுதலை தான் தமிழ் மக்களுடைய இலட்சியமாக இருந்து வருகின்றது அது இன்னமும் வலுப்பெற்று வருகின்றது என்றார்.

இராமநாதபுரம் மேற்கு அரசின் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமான நிகழ்விற்கு பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் சுரேன் தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரினை அரசண்ணா ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை தூயவன் அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் புலிமறவன் ஏற்றிவைத்தார்.

ஈகைச்சுடரினைபிரதேச சிறப்புவேலைத்திட்டப் பொறுப்பாளர் சாகியன் ஏற்றிவைக்க மலர்மாலையினை மாவீரரின் சகோதரன் அணிவித்தார். (அ)

# அரசு நிதி ஒதுக்காமையால் முறைப்பாடுகள் விசாரிக்கப்படவில்லை மனித உரிமை ஆணையம்

(கொழும்பு)

அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்படாதால் தான் காணாமல் போனோர் குறித்த 2,127 முறைப்பாடுகளை விசாரிக்கவில்லை என்று மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த மனித உரிமைகள் ஆணையர் டி.ஜயவிக்கிரம கூறியதாவது, காணாமல் போனோர் வழக்குகளை கைவிட பிரதான காரணமே நிதிதான்.

வழக்கை விசாரிப்பதற்கான பணியாளர்களை நியமிக்க வேண்டும். உபகரணங்கள் வாங்க வேண்டும் போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதி உள்ளிட்ட அனைத்தும் செய்து கொடுக்கப்படவேண்டும். 15க்கும் மேற்பட்டோர் நியமிக்கப்படவேண்டிய தேவை உள்ளது.

காணாமல் போனோர் குறித்த வழக்குகளை விசாரிக்க நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி திறைசேரிக்குக் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தோம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் விசாரணை நடத்த தயாராக உள்ளோம் என்றார் அவர்.

மனித உரிமைகள் ஆணையத்தைச்சேர்ந்த மற்றொரு அதிகாரியான பி. இராமநாதன் நிதிதான் பிரச்சினையாகவுள்ளது. நிதி உதவி வழங்கிய அமைப்புகளும் நிதியைநிறுத்தி விட்டனர் என்றார்.

ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணையத்துக்கு நிதி உதவி அளித்து வந்த பிரித்தானிய அமைப்பிடமிருந்து கடந்த ஜனவரி மாதம் முதல் நிதிகிடைக்கப் பெறவில்லை. ஆகையால் பணியாளர்களுக்கு ஊதியம் அளிக்கப் படவில்லை. அதனால் மற்றொரு பணித்திட்டத்துக் காக 1 மில்லியன் கடனைப் பெற்று ஊதியத்தை அளித்தோம். யூலை மாத ஊதியம் அளிக்கப்படவில்லை என்றார் மனித உரிமைகள் ஆணையச் செயலாளர் பெனி டிக் சில்வா.

இந்நிலையில் மனித உரிமைகள் ஆணையக் குழுவுக்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி மகனம திலக்ரட்ணவை நியமித்து மஹிந்த உத்தரவிட்டுள்ளார். மனித உரிமை ஆர்வலரான எஸ்.ஜி.புஞ்சிஹெவவை முன்னர் மஹிந்த நியமித்திருந்தார். ஆனால் மஹிந்தவின் நியமனத்தை அவர் நிராகரித்துவிட்டதையடுத்து இப் புதிய நியமனத்தை மஹிந்த அறிவித்துள்ளார். (அ)

## பிறப்பு இறப்பு பதிவுச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்ளுவதற்கான சட்ட மூலம் திருத்தப்படவுள்ளது.

1951 ஆம் ஆண்டு இறுதியாக அதில் திருத்தம் கொண்டு வரப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளுவது அவசியமானது என்று பதிவாளர் நாயகம் எல்.கே. ரட்ணசிறி தெரிவித்துள்ளார்.

திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கான அங்கீகாரத்தை தற்போது அமைச்சரவை வழங்கியுள்ளது. இந்த திருத்தத்தை மேற்கொள்ளுவதற்கு முன்னர் மேலும் இரண்டு திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கான பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள் ளன.

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களாக தியமனம் பெற்ற பின்னர் அரசியலில் இணையும் போது அந்தப் பதவி நிராகரிக்கப்படும் என்பது சட்டமூலத்தின் திட்டம்.

இது தவிர பிறப்பு ,இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களின் கொடுப்பனவு 250 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபா வரை அதிகரிப்பதற்கான நகல் சட்டமூலமொன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அடுத்த மாத இறுதிக்குள் திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படுமென் று பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (க-9)

## தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யோசனைகள் பொது மக்களிடம் கேட்கிறது புத்திஜீவிகள் குழு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் மற்றும் யாப்பு ரீதியான தீர்மானமொன்றை முன்வைப்பதற்காக ஜனாதிபதி நியமித்த புத்திஜீவிகள் குழு பொதுமக்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக் கொள்ளவுள் ளது.

இதன் பிரகாரம் மக்கள் அமைப்பு அரசியல் கட்சிகள் மற்றும் தனிநபர்களை இது தொடர்பில் கருத்துக்களையும் யோசனைகளையும் முன்வைக்குமாறு புத்திஜீவிகள் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

முன்வைக்கும் கருத்துக்களின் இரகசியம் பேணப்படும் மேலும் முன்வைக்கப்படும் கருத்துக்கள் 20 பக்கங்களை தாண்டாமல் இருக்கவேண்டும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்தக் கருத்துக்களை முன்வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கொழும்பு 03 காலி வீதி இலக்கம் 310 இல் அமைந்துள்ள அரசியல் யாப்பு மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் செயலாளருக்கு குறிப்பிட்ட யோசனைகள் அனுப்பிவைக்கவேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.(அ-9)

# இஸ்ரேலுக்கு எதிராக மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



லெப்னான் மீது தொடரும் இஸ்ரேலிய தாக்குதல்களைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஜும்மா தொழுகையின் பின்பு ஏறாவூர் மற்றும் காத்தான்குடி ஆகிய இடங்களில் வீதியில் ஒன்றுகூடிய முஸ்லிம்கள் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிற்கு எதிராக பல்வேறு வாசக அட்டைகள் ஏந்தியவாறு கோஷங்களையும் எழுப்பினார்கள்.

காத்தான்குடி ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்த நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த பிர்தௌஸ் நளிமி இந்தத் தாக்குதல்களை சர்வதேச சமூகம் கண்டிக்க முன் வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (து)

# இலவச சித்த ஆயுள்வேத மருந்தகம்

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப பணிமனையில் திறந்து வைக்கப்பட்ட இலவச சித்த ஆயுள்வேத மருந்தகம் பிரதி புதன், வெள்ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை திறந்திருக்கும் என்றும் நோயாளர் அந்த நேரத்தில் மருந்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நோயாளர்களது எண்ணிக்கை கூடும் பட்சத்தில் மேலதிக நாள் ஒதுக்கப்படுவது பற்றி ஆலோசிக்கப்படும் என்றும் தெரிவித்தனர். (அ-29)

# அதிகாரமின்றி அலட்டும் ஜே.வி.பி

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவை நாட்டை விட்டு வெளியேறுமாறு கோருவதற்கு ஜே.வி.பிக்கு அதிகாரம் இல்லை. இலங்கை அரசாங்கம் எமக்கு முழுமையான ஆதரவினை வழங்கி வருகின்றது. இந்த நிலையில் எமது பணி தொடரும் என்று யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தற்காலிக பேச்சாளர் ரொபட் நீஸ்ஸன் தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழு உடனடியாக வெளியேறவேண்டுமென ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கோரியுள்ளமை குறித்து கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (து)

# எண்ணெய் வள அகழாய்வுக்கென சீனாவை மன்னாருக்கு அழைத்துள்ளது அரசு

இந்தியாவை எச்சரிக்கும் வகையில் மன்னார் பிரதேசத்தில் சீனா மற்றும் ஜப்பானை சிறிலங்கா அரசாங்கம் அனுமதித்துள்ளது.

மன்னார் பிரதேசத்தில் பெற்றோலிய எண்ணெய் வளம் தொடர்பான அகழாய்வுப் பணிக்கு சீனாவை அரசு அழைத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் அண்மைய சீன பயணத்தின் போது இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிலையில் பிரதான நிலப்பரப்பிலிருந்து மன்னார் தீவுப் பகுதியை இணைக்கக்கூடிய பாலத்தை சீரமைக்க ஜப்பானுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு ஜூலையில் இந்தப் பாலம் தகர்க்கப்பட்டது. 3.5 கிலோ மீற்றர் நீளமுள்ள இப்பாலம்தான் பிரதான நிலப்பரப்பை மன்னாருடன் இணைக்கிறது.

ஜப்பானின் சர்வதேச கூட்டுறவுச் சபையினூடாக இந்தப் பணிகளை ஜப்பான் அரசாங்கம் தொடங்க முடிவு செய்துள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இப்பணிகள் தொடங்கப்படவுள்ளன.

ஜப்பான் உதவியுடன் மன்னம்பிட்டிய பாலம் தற்போது சீரமைக்கப்பட்டு வருகிறது. (அ)

# படையினர் மீது தாக்குதல்

யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவும் பரவலாக படைத்தரப்பினருக்கு எதிராக தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் காரணமாக நான்கு படைத்தரப்பினர் காயமடைந்தனர். நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கொடிகாமத்தில் நிகழ்ந்த கைக்குண்டுத் தாக்குதல் காரணமாக மூன்று படையினர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினரது முகமாலை முன்னரங்கத்தை நோக்கி நடத்தப்பட்ட சினைப்பர் தாக்குதல் சம்பவம் காரணமாக ஒரு சிப்பாய் காயமடைந்துள்ளார்.

அதேவேளை நேற்று முன்தினம் 6.30 மணியளவில் பலாலி வீதி, திருநெல்வேலி மற்றும் ஊரெழு ஆகிய இடங்களில் படைத்தரப்பினர்க்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் பிற்பகல் 2.20 மணியளவில் பருத்தித்துறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போது 3 படைத்தரப்பினர் காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடக்கில் கடற்படையின் ரோந்து நடவடிக்கை அதிகரிப்பு

வடக்கு- கிழக்கு கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான படகுகள் சிலவற்றின் நடமாட்டங்களை அவதானித்ததாலேயே இந்த ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பாக வடக்கில் குடாநாட்டு கடலில் தீவிர கடல்ரோந்து நடவடிக்கைகள் இடம் பெறுவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

காரைநகருக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலும் மண்டைதீவிற்கும் கிளாலி கடற்பிராந்தியத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலும் இந்த ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

காரைநகர் முதல் மாதகல், சேந்தாங்குளம், கீரிமலை, மயிலிட்டி கடலில் வழமைக்கு மாறாக ரோந்து படகுகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காரைநகர் கடற்படை தளத்தில் பாரிய கடல்சார் ஒத்திகை பயிற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

அதேநேரம் மண்டைதீவு முதல் கிளாலி வரையான கடற்பிராந்தியத்திலும், கடற்படை தனது ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருக்கிறது. குறிப்பாக் கிளாலி கடற்பிராந்தியம் ஊடாக குடாநாட்டு கடலுக்குள் புலிகள் பிரவேசிக்கலாம் என்று கருதியே இந்த ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக கடற்படை வட்டாரங்கள் மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (அ)

# லெபனானிலிருந்து மேலும் பலர் நாடு திரும்பினர்

லெபனான் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மேலும் 18 இலங்கையர் நேற்றைய தினம் நாடு திரும்பியுள்ளனர்.

லெபனானுக்கு எதிராக இஸ்ரேலிய துருப்பினரின் தாக்குதல் காரணமாக இடம்பெயர்ந்தவர்களில் மேலும் 18 இலங்கையர் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

லெபனானில் இருந்து சைப்பிரஸுக்கு அழைத்து செல்லப்பட்ட இவர்கள் அங்கிருந்து இந்தியா ஊடாக இலங்கை வந்துள்ளனர்.

அதேவேளை நேற்று முன்தினம் 600க்கு மேற்பட்ட இலங்கையர்கள் லெபனானில் இருந்து திரும்பியுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தவிர மேலும் பல இலங்கையர்கள் வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஹெல உறுமயவின் இடையூறால் கண்டியில் சர்வ மதப் பிரார்த்தனை கைவிடப்பட்டது

கண்டி நகரில் சர்வமத தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளைத் தொடரக் கோரும் பிரார்த்தனை, சத்தியாக்கிரக நடவடிக்கைகளுக்கு எதிராக தேசிய ஹெல உறுமய ஆதரவாளர்கள் சிலர் இடையூறு விளைவித்ததால் இந்நிகழ்ச்சியை இடையில் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணியளவில் இந்நிகழ்ச்சி கண்டி ஜோர்ஜ் ஈ.சில்வா கூரைப்பூங்காவில் நடைபெற்றது.

நீதிக்கான சமாதான மனித அபிவிருத்தி மற்றும் மனித உரிமை ஆணைக்குழு செயலகத்தினால் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)

## சிறப்பு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி தனது வாடிக்கையாளர் சேவையின் 67ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். மேற்தரக் கிளையில் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது. (து-133)

## புதிய வைத்திய அதிகாரி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரியாக சுவாமிநாதன் சுகாதாரப் பிரிவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நீண்டகாலமாக வெளிநாட்டில் பணிபுரிந்தவர் என்றும் காரைநகரைச் சேர்ந்தவர் என்றும் தெரியவருகின்றது. நிரந்தர வைத்திய அதிகாரி ஊர்காவற்றுறைக்கு வேண்டுமென ஆஸ்பத்திரி அபிவிருத்தி சங்கம் பல தடவைகள் சுகாதார அமைச்சுக்கு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-72)

## தலை சிதறிப் பலி

(ஊர்காவற்றுறை)

கொழும்பிலிருந்து கடந்த வாரம் யாழ் வர இருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் ரயில் கதவு அடிபட்டு தலைசிதறிப் பலியானார்.

ஊர்காவற்றுறை சுருவில் வீதியைச் சேர்ந்த அப்பன் என்று அழைக்கப்படும் ஜெகநாதன் லோகேஸ்வரன் (வயது-24) என்பவரே ரயிலால் அடிபட்டு உயிர் இழந்தவராவார்.

ஊர்காவற்றுறையிலுள்ள தனது தாயாரைப் பார்க்க வந்தபோது இவ்விபத்து நடைபெற்றதாக தெரியவருகின்றது. (து-72)



நிக்கொட் நிதி உதவியுடன் கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு பின்புறமாக விவசாய ஆய்வு நிலையத்திற்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ள கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்கான கமநல சேவை நிலையத்தின் அடிக்கல்லை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நாட்டுவதையும், யாழ். தலைமைக் காரியாலய பெரும்பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் மற்றும் கமநல சேவை உத்தியோகத்தர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- மருதங்கேணி நிருபர்)

# நளின் டி சில்வாவின் நயவஞ்சகப் பேச்சை நம்பும் நிலையில் நற்றமிழ் இனம் இல்லை

தமிழர்களுக்கு தனியான மலை பண்பாடு இல்லை என அனைத்துக்கட்சி மாநாட்டில் பேராசிரியர் நளின் டி சில்வா திருவாய் மலர்ந்தருளி உள்ளார். பொய் பேசுகின்ற உரிமை எவருக்கும் உண்டு. பொய் பேசுவதற்கு மக்களாட்சியும் இடங்கொடுக்கிறது. ஆனால் இலங்கையில் இப்பொழுது மக்களாட்சி மாக்களாட்சியாக மாறியிருப்பதன் அளவு, பேராசிரியப் பெருந்தகையோரும் நிறையப் பொய் பேசுகின்றனர். ஆனால் அவர்கள் பேசுகின்ற பொருந்தாப் பொய் எம்மவர் எள்ளிநகையாடத்தக்க முறையில் கீழ் நோக்கிச் சென்றுள்ளது.

அனைத்துக் கட்சி மாநாட்டில் 'இனப் பிரச்சினை என்ற ஒன்று இங்கில்லை. தமிழ் மக்களும் தங்களுக்குப் பிரச்சினை இருப்பதாக அரசாங்கத்திடம் முறையிடவில்லை. அதற்கான பேச்சுக்கள் கூட நடைபெறவில்லை. ஆயுதப்போராட்டத்தை மாத்திரமே தமிழ் மக்கள் ஆரம்பித்திருக்கின்றனர். அது வெறும் பயங்கரவாதப் பிரச்சினைதான்' என்று பேராசிரியர் நளின் டி சில்வா கூறியுள்ள கருத்தினைப் படிக்கின்ற போது அழுவதா சிரிப்பதா என்று தெரியாது நாம் தத்தளிக்கின்றோம். அவர் தன் உரையில் இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று கூறுவதோடு நில்லாது தமிழ் மக்களும் தங்களுக் குப் பிரச் சினை இருப்பதாக அரசாங்கத்திடம் முறையிடவில்லை. என்றும் அதற் குரிய பேச்சுக்கள் நடைபெறவில்லை என்றும் ஆயுதப் போராட்டத்தை மட்டுமே தமிழ் மக்கள் தொடக்கியிருக்கிறார்கள். என்றும் அது வெறும் பயங்கரவாதப் பிரச்சினை என்று முழுப்பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கும் முயற்சியில் பேராசிரியர் நளின் டி சில்வா ஈடுபட்டிருப்பது எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

*சிங்களவரின் தாய்வழி உறவை மாற்றி அமைக்க முனைந்த சேர்.ஆதர்.ரணசிங்க*

சிங்கள மக்களிடையே இப்பொழுது ஒரு நோய் பரவியிருக்கிறது. அதற்குப் பெயர் சிங்கள வல்லாண்மை அல்லது சிங்கள ஆதிக்கம் என்று கொள்ளலாம். தம் வல்லாண்மையை நிலைநாட்ட வரலாற்றையே மாற்றியமைக்க முயல்கின்றனர். வரலாற்றைத் திரிக்கும் இவர்களுடைய கருத்து சிங்கள பொதுமக்களிடையே கைதட்டலைப் பெறுவதற்குப் பயன்படலாம். ஆனால் அறிஞர் உலகம் இவர்களை எள்ளி நகையாடியே தீரும். சிங்கள இனத்தின் தோற்றத்தை நாம் உற்றுக் கவனிப்போமே ஆயின் அது ஒரு கலப்பு இனம் என்பதற்கு நிறைய வரலாற்றுச் சான்றுகள் உண்டு. சிங்களவரின் முன்னோடி என்று கூறப்படும் விஜயன் தன் தந்தைக்குத் தாங்கமுடியாத தொல்லையைக் கொடுத்தனால் வேண்டாத பிறவியென்று இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டவன். அவனும் அவனது எழுநூறு தோழர்களும் புயற்காற்று வீச்சினால் தப்பித்தவறி புத்தளத்தில் வந்திறங்கினர்.

விஜயன் தான் இலங்கைக்கு முதலில் வந்த கள்ளத்தோணி. இது மூடி மறைக்க முடியாத உண்மை. வந்தவர்களுக்குப் பெண்கள் தேவைப்பட்டனர். எனவே விஜயனும் அவன் தோழர்களும் இலங்கையில் இருந்த குவேனி என்ற இயக்கர் இனப் பெண்ணையும் அவளது தோழிகளையும் திருமணம் செய்தனர். குவேனியும் அவளுடைய தோழிகளும் பழங்குடி மக்களைச் சார்ந்தவர்கள். பண்பாடு நாகரிகம் அற்றவர்கள். ஆனால் விஜயனும் அவன் தோழர்களும் தாம் எப்பொழுது துரோகத்திற்கு துணை போவர் என்பதை எடுத்துக்காட்டுகின்ற முறையில் குவேனியும் அவள் தோழிகளும் அரச மரபைச் சார்ந்தவர்கள் அல்லர் என்ற நிலையிலோ அழகற்றவர்களாக இருந்தார்கள் என்ற நிலையிலோ அவர்கள் முற்றாகக் கைவிடப்பட்ட நிலையில் தமிழ் நாட்டு மதுரையில் இருந்து பெண் எடுத்தனர் என்பது அவர்களின் வரலாறு என்று மகாவம்சம் கூறுகின்றது.

இதிலிருந்தே சிங்கள இனத்தின் தாய்வழி தமிழ்க்கலப்பிலேயே தோன்றியது என்பதற்கு நாம் வேறு சான்றுகள் தேடத்தேவையில்லை. ஆனால் காலப்போக்கில் தமிழர் மீது கொண்ட வெறுப்பின் காரணமாகச் சிங்களவர்களின் தாய்வழி உறவு தமிழர் எனின் அது தமது தன் மானத்திற்கு இழுக்கு எனக்கருதி அவர்களின் தாய்வழித் தோற்றம் பாண்டியன் மதுரை அல்ல மாறாக மகாரசாவில் உள்ள மதுரை என்று வரலாற்றை முற்றாக மாற்றி அமைக்கின்ற முறையில் 1946 இல் இலங்கைக் குடித்தொகைக் கணக்கை வரைந்தவர் சேர். ஆதர்.ரணசிங்க இவர் பின்பு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராய் விளங்கியவர். அவர் தன் நூலின் அணிந்துரையில் நம்ப முடியாத அளவிற்கு வரலாற்றைத் திரித்து விஜயனும் அவனுடைய தோழர்களும் பாண்டி நாட்டின் மதுரையில் இருந்து பெண் எடுக்கவில்லை மாறாக மகராசாவில் உள்ள மதுரையில் தான் பெண்களை எடுத்தனர் என்று அறிஞர் உலகம் எள்ளி நகையாடத்தக்க முறையில் கருத்துத் தெரிவித்திருப்பது இங்கு நாம் சிந்தனைக்குக் கொள்ள வேண்டும்.

*சிங்கள இனமும் சிங்கள மொழியும் தமிழரால் வளம் பெற்றது என்று டாக்டர். ஜி. சி.இ.மென்டிஸ் மொழிகிறார்.*

டாக்டர் ஜி.சி.இ.மென்டிஸ் அவர்கள் தனது "Ancien th istory of ceylon" (இலங்கையின் தொன்மை வரலாறு) என்ற நூலில் சிங்களவரின் நாடிகளிலும் நரம்பு களிலும் தமிழ் இரத்தம் ஒடுகிறது என்று குறிப்பிட்டுள்ளார். (In the veins and arteries of the Singhalaese Tamil blood is running. Tamils have helped to form the Singhala race) என்று கூறிய தோடு நில்லாது "In the vocabulary and structure of the Singhala language Tamil influence is permanent and have enriched the Singhala language" (சிங்கள மொழியின் சொல்லாட்சியிலும் அமைப்பிலும் தமிழின் தாக்கம் நிலைத்தது. தமிழ், சிங்களத்தை வளப்படுத்தியுள்ளது) சிங்களத்தில் நாளாந்தம் கையாளும் சொற்கள் அம்மே, தாத்தே, அக்கே, ஐயே, நங்கி என்றே தங்கள் உறவு முறையைக் குறிப்பதற் குக் கூட தமிழ் வேர்ச் சொற்களையே கடன் பெற்று வளம் பெற முயல்கின்றனர். அம்மா, அப்பா, தாத்தா, அண்ணா, நங்கை என்ற தமிழ்ச்சொற்களே சிங்களத்தில் திரிவுபடுத்தப்பட்டு கையாளப்படுகின்றன.

இடத்தை இடம் என்றே குறிக்கிறார்கள். சிங்களவர்களிடம் செங்கோல் ஆட்சியை நாம் காணமுடியாததனால் போலும் நாடாளுமன்றத்தில் தமிழ்ச் சொல்லாகிய செங்கோலையே தமது செங்கோலைக் குறிக்க செங்கோல் என்றே சிங்களத்தில் கையாளுகின்றார்கள். உண்மையில் நாம் இப்போது நாடாளுமன்றத்தில் செங்கோலைக் காண முடியாது கொடுங்கோலையே காண்கிறோம். ஆனால் அங்குள்ள கோலுக்குச் செங்கோல் என்று பெயரிடப்பட்டுள்ளது. தமிழுக்கு எவ்வளவு தூரம் சிங்களம் கடமைப்பட்டுள்ளது என்பதற்கு சென்னை கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் கு. அரசேந்திரன் எழுதியுள்ள 'தமிழால் தழைத்த சிங்களம்' என்ற நூலில் விரிவினைக் காண்க. வேறு சொற்களில் விளம்பின் தமிழைப் பிழையாகப் பேசினால் அது சிங்களமாக மாறும் என்று கூறுகின்ற அளவிற்கு தமிழ்ச்சொற்களை திரித்துக் கூறித்தான் சிங்களம் வாழ்கின்றது.

*தாழ்வு உணர்வுள்ள சிங்கள இனம் தமிழனைத் தாக்கி நிறைவு காணமுயல்கிறது.*

சுருங்கக் கூறின் மொழியிலும் சரி இனத்திலும் சரி தனித்துவமற்ற சிங்கள இனம் தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி தமிழனைத் தாக்கி தமிழன் உரிமைகளைத் தட்டிப்பறித்து வாழ்வுபெற முனைகின்றனர். "Though the Singhalcse are a majority they suffer from a minority complex" சிங்களவர் பெரும்பான்மை இனமாக இருப்பினும் தாம் சிறுபான்மை இனம் என்ற தாழ்வு மனப்பான்மை அவர்களிடம் உண்டென்று அன்று பேராசிரியர் கே.எம்.டி.இ.சில்வா கூறிய கூற்று இங்கு நினைவுகொள்ளத்தக்கது. சிங்களவர் தாமாக தமக்கு வருவித்துக் கொண்டுள்ள தாழ்வு மனப்பான்மைக்கு தமிழர்களா பொறுப்பாளிகள்.

*நரம்பில்லா நாக்குடைய நளின் டி சில்வா*

காலந்தோறும் நல்ல கருத்துக்களை வழங்கிய சிங்களத் தலைவர்கள் கூட பின்பு தடம்புரண்டு தடுக்கி விழுந்ததற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல. எஸ்.டபிள்யு.ஆர். டி.பண்டார நாயக்கா, டாக்டர் என்.எம்.பெரேரா, டாக்டர்.கொல்வின் ஆர். டி.சில்வா ஆகியோர் அரசியலில் தடம்புரண்டதில் தனி இடம் வகிக்கின்றனர். இவற்றிற்கு மாறாக தமிழன் மீது வெறுப்புக் கொண்டு பொருத்தமற்ற பொய்களைப் பேசி வாழ்ந்தவர்கள் தான் அனாகரிக தர்மபால, ஆனந்தக் கல்லூரி முதல்வர் மெத்தானந்த, பேராசிரியர் மழலசேகர, களனிப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக விளங்கியவர் ஆகியோராவர். இவர்கள் வரிசையில் இன்று இடம்பெற்று செயற்படுபவர்கள் தான் ஜாதிஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதயகம்மன் வெல, போராசிரியர் நளின்டி சில்வா அவர்கள் நரம்பில்லா நாக்கோடு இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்று கூறுகின்றனர். தமிழ் மக்கள் தங்களுக்குப் பிரச்சினை இருப்பதாக அரசிடம் முறையிடவில்லை என்று கூறுகின்றனர். அத்தோடு தாங்கிய பயங்கரவாதிகளாகத் தமிழ் மக்கள் காட்சியளிக்கிறார்கள் என்றும் கூறிகிறார்கள். ஆனால் அவருக்கு செல்வா பண்டா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், சிறிமாவோ செல்வா உடன்படிக்கை, ஜே.ஆர்.அமுதலிங்கம் ஒப்பந்தம், தெம்பு தரும் என்று நம்பிய வம்பில் முடிந்த திம்பு ஒப்பந்தம், ஜே.ஆர்., ராஜீவ் ஒப்பந்தங்கள் தமிழர் குறையை நீக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் இல்லை என்று நளின்டி சில்வா நவில முயல்கின்றாரா? ஒப்பந்தங்கள் ஒப்பேறாததற்கு தமிழர்களா பொறுப்பு.

*தந்தை செல்வா வழியே பிரபாவின் வழி என்பதை நளின் டி சில்வர உணர்தல் நலம்*

இப் பேரறிஞர்களுக்கு சேர்.பொன். அருணாச்சலம் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து பிரிந்து ஏன் தமிழர் பேரவையை உருவாக்கினார்? சிங்களவர் இதயத்தில் தனியிடம் பெற்ற இராமநாதன் அவர்கள் டொனமூர் எனின் இனிமேல் தமிழன் இல்லை என்று கூறியதோடு ஜெறிக்கும்பலுக்கு ஆட்சியை ஒப்படைக்க நான் உடந்தை இல்லை என்றும் 1920 களிலேயே இவர்கள் கூறியதற்குக் காரணம் என்ன? சிங்களப் பேரறிஞர்களுக்கும் சட்ட வல்லுநர்களுக்கும் இது புரியவில்லையா? 1940களில் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் தமிழினத்தின் ஆன்மாவைப் புதைக்க வந்த சட்டம் சோல் பெரி சட்டம் என்று அவர் கொதித்தெழுந்த தற்கு காணரம் என்ன? தந்தை செர்வாவோ நடுங்

**மா.க.ஈழவேந்தன்**

கும் மேனியுடன் ஆனால் நடுங்காக் கொள்கையுடன் 1976 இல் நவம்பர் 19 இல் தந்த இறுதி உயில் என்ன? சிங்களப் பிடியில் நாம் இனிச்சிக்க முடியாது. சிக்குவோமாயின் அழிந்துவிடுவோம். தமிழீழம் ஒன்று தான் எமக்கு நிலையான தீர்வு. தந்தை செல்வாவின் குரல் அறவழியில் அமைந்திருந்தது செவிமடுக்க சிங்களவர் மறுத்த நிலையில் மற வழியில் ஆயுதம் தாங்கிய போராட்டமாக எம் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுடைய போராட்டம் அமைகிறது இவ் உண்மையை உணர மறுத்து சிங்கள பேரினவாதம் எம்முடன் முட்டிமோத முனைவதால் விரும்பாத விளைவுகள் ஏற்படுவது உறுதி.

# விமானத் தாக்குதல் மூலம் சிறிலங்கா அரசு ஒப்பந்தத்தை செல்லுபடியாக்கியுள்ளது

## தயாமோகன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழமெங்கும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதன் மூலம் போர் நிறுத்த



ஒப்பந்தமானது செல்லுபடியற்றதாகிவிட்டது என்பதை அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்று மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தயாமோகன் கூறியுள்ளதாவது, போர் நிறுத்த ஒப்பந்த விதிமுறைகளுக்கு அமைவாக இல்லாமல் தொடர்ந்து தமிழீழமெங்கும் விமான குண்டு வீச்சு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கையானது போர் நிறுத்த ஒப்பந்தமானது செல்லுபடியற்றதாகிவிட்டது என்பதை சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளதற்கான தாக்குதலாகத்தான் இதை பார்க்கிறோம்.

இத் தாக்குதல்கள் மூலம் சிறிலங்கா அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் தனது முகத்திரையை கிழித்துக்கொண்டுள்ளது. தாக்குதல் பகுதிகளைப் பார்வையிடுமாறு போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால் அவர்கள் எமக்கு அளித்த பதிலில் அந்தப் பகுதி ஒரு பாதுகாப்பற்ற பிரதேசம் என்பதால் அங்கு செல்ல வேண்டாம் என்று தலைமை அலுவலகத்திலிருந்து தங்களுக்கு தகவல் வந்திருப்பதாகக் கூறினர் தயாமோகன். (அ)


# கதிர்காம பக்தர்களின் வாகனங்களுக்கு சோதனையின் பின் மயில் பொறித்த ஸ்ரிக்கர்

கதிர்காமக் கந்தன் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் இம்முறை புதிய அனுபவங்களைப் பெற்று வருவதாக கூறப்படுகிறது.

அங்கு செல்லும் வாகனங்களுக்கு புத்தள கதிர்காம வீதி சோதனைச்சாவடியில் வைத்து பாதுகாப்புப் படையினர் மயில் பொறித்த ஸ்டிக்கர் ஒன்றை சோதனையின் பின்னர் ஒட்டி விடுகின்றனர். வெளியூர் வாகனங்களின் அடையாளமாகவும் சோதனை செய் யப்பட்ட அடையாளமாகவும் இதனைக் கருதலாமென கூறப்படுகிறது.

கதிர்காமத்தில் ஆலயத்துக்குச் செல்லும் மாணிக்க கங்கை பாலத்தை கடந்ததும் பக்தர்கள் கொண்டுசெல்லும் பொலித்தீன் பைகளைப் பெற்றுக்கொண்டு வெண்ணிற சீலைப்பைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதற்கு யு.எஸ்.எய்ட் அனுசரணை வழங்குகிறது. இந்து யாத்திரிகர் விடுதி, வள்ளியம்மன் ஆலயம் முதலிய இடங்களில் தினமும் மதியமும் மாலையும் அன்னதானம் வழங்




கப்பட்டு வருகின்றது. இரு மொழிகளிலு அறிவித்தல் வழங்கப்படுகிறது.

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 40

முருக-தனுஷ்கோடி



கல்வியின் சிறப்பை உணராத மக்கள் சின்னஞ்சிறு குழந்தைகளைக் கல்லாத மூடமாக்கிவரும் தீமைதனைக் கண் டுவெகுண்டார் காமராஜயர் கட்டாய ஆரம்பக் கல்வித் திட் டத்தை உருவாக்கினார். இன்று பல்லாயிரக்கண்கான கிரா மங்களில் இது நிறைவேறுகிறது. லட்சோப லட்சம் குழந்தைகள் கல்வி ஒளிபடைத்தவர்களாகி வருகின்றனர்.

கிராமங்கள் தோறும் பிரச்சாரம் செய்வதற்கான கமிட்டிகள் அமைக்கப்பட்டுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கவும் ஆவன செய்யப்பட்டது.

இலவசக் கல்வி வ்சதி கட்டாயக் கல்வித்துறை இரண்டும் இருந்தும் எல்லாக் குழந்தைகளும் படிக்கும் நிலை ஏற்படவில்லை ஏன். என்று கவலையுடன் சிந்தித்தார். காமராஜ். கிராமங்களிலுள்ள மக்களைச் சந்தித்தார். அதற்கான காரணங்களையும் அறிந்து கொண்டார் அதற்குப் பரிகாரமும் அவரது மனத்தில் தோன்றியது.

வறுமையால் மெலிந்த உடல் ஒளியில்லாக்கண் எண்ணெய் இல்லாத தலை உடையில்லாத உடம்பு ஒதுங்கி வாழக்குடிசை வயிறாரா உண்ண ஒரு வேளைக் கஞ்சி ஆகியவை இல்லாத ஏழை எப்படித் தன் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவான்?

ஒரு வேளையாவது குழந்தைகளுக்கு உணவு அளித்தால் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பும் ஆசை பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் ஏற்படுமே! இதைக் காமராஜ் உடனே செய்தார்!.

இலவச மதிய உணவுத் திட்டம் லட்சக்கணக்கான குழந்தைகளைப் பள்ளிக்கு வரச் செய்தது. உலக நாடுகள் பலவும் இத்திட்டத்தைப் பாராட்டின. ஓர் அமெரிக்க அறிஞர் அமெரிக்காவில் இதைப் பிரபலப்படுத்தப்போவதாக ஒரு முறை அறிவித்தார். நேருஜி இத் திட்டத்தைக் கண்டு உள்ளம் பூரித்தார்.

1956 மதிய உணவு அளிக்கும் திட்டம் முறையாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்பு மக்கள் தாங்களே ஏற்று நடத்துவதாக இருந்த திட்டம் அரசாங்க மான்யம் வழங்கப்பட்டது. முதல் வலுப் பெற்று விட்டது.

இரண்டாவது திட்ட இறுதிக்குள்ளாக மாநிலத்திலுள்ள பெரும் பகுதிப் பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. மூன்றாவது திட்ட காலத்தில் தொடர்ந்து இத்திட்டம் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டது. பின்னர் 14 இலட்சம் சிறுவர்களுக்கு அதிகமானோர் இத்திட்டத்தால் பயன் பெற்றனர்.

அரசாங்கம் அளிக்கும் உதவி இவை இரண்டோடு 1961-62ல் அமெரிக்க கேர் நிறுவனத்தின் உதவியும் இத்திட்டத்திற்கு கிடைத்தது. பால் பவுடர் சோளமாவு தாவர எண்ணெய் ஆகிய பொருள்களை கேர் நிறுவபனம் நமது ஆரம்பப் பள்ளிகளுக்கு இலவசமாக வழங்கியது.

கல்வி வளர்ச்சியில் ஆழ்ந்த கவலை கொண்ட காமராஜ் மக்களின் ஆர்வத்தை மேலும் தீவிரப்படுத்த விரும்பினார். கல்வியை வளர்க்க பரப்ப திட்டங்களை நிறைவேற்ற, நிர்வாகிக்க, அரசாங்கம் பல்வேறு பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இது நெடுநாளைய நிலைமை எனினும் காமராஜ் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்தின் இந்தப் பொறுப்பு பலமடங்கு உயர்ந்தது. அதனால் பல புது திட்டங்கள் நிறைவேறின ஆனால் மக்கள் இதில் நேரடியான ஈடுபாடும் காட்ட வேண்டிய அளவுக்குக் அக்கறையும் காட்டவில்லை.

### அற்புத இயக்கம்

பள்ளிகள் கட்டுவதும் .பகல் உணவு அளிப்பதும். ஆசிரியர் நியமிப்பதும் ஏதோ சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்கள் ,இதில் நமக்கு ஒன்றுமில்லை என்ற நிலைதான் இருந்தது. இதை மாற்றி கல்வித் துறை வரலாற்றிலேயே என்றும் கண்டிராத ஒருமாபெரும் புரட்சி இயக்கத்தைத் துவக்கினார் காமராஜ்.

கல்வி என் பொறுப்பு கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்ற உணர்ச்சி ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படும்படி செய்த அந்த அற்புத இயக்கத்தின் பெருமையை எழுத்தில் விளக்கிவிட முடியாது. அதுதான் பள்ளிவளர்ச்சித்திட்டம் மக்கள் இயக்கம் கண்டு மக்கள் உணர்ச்சியை இதில் இரண்டறக் கலக்கச் செய்த பெருமை காமராஜுக்கே உரித்தானது.

தமிழ் நாடெங்கும் பள்ளி வளர்ச்சி இயக்க மாநாடுகள் நடத்தப்பெற்றன முதல் 25 மாதங்களின் தமிழகமெங்கும் நடைபெற்ற 133 மாநாடுகளின் மூலம் 647 கோடி ரூபாய் பெறுமான நன் கொடைகள் கிடைத்தன. ரொக்கமாக மட்டும் சும்ர் 4 கோடி ரூபாய் நன்கொடை அளித்தனர். மக்கள் புதுமையான இத்திட்டம் யாவரையும் கவர்ந்தது காமராஜை மனமாரப் பாராட்டினர் உலக மக்கள்.

ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம்., சிலேட்டு ஆகியவை வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இலட்சக்கணக்கான ஏழைச் சிறுவர்கள் பயன் பெறச் செய்யப்பட்டது.

ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கும் திட்டம் ஒன்றும் வகுக்கப் பெற்று அமுல் செய்யப்பட்டது. குழந்தைகள் மத்தியில் ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு ஏற்படாமல் தடுக்க ஏதாவது வழி செய்யவேண்டும் என்று காமராஜ் சிந்தித்தார். அதன் பயன்தான் இலவச சீருடைத் திட்டம் இதனால் குழந்தைகள் மத்தியில் தாழ்வு உணர்ச்சி தலைகாட்ட முடியாமல் போகுமல்லவா? இன்று பள் ளிக்கூடங்களில் மனத்தைக் கவரும் கண்கொள்ளாக் காட்சியாக சீருடை அணிந்து சிறுவர் சிறுமியர் காணப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ்ப்பல இலட்சம் சிறுவர் சிறுமியர் பயனடைந்தனர்.

எல்லாருக்குமே இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பது காமராஜ் விருப்பம் இதை நிறைவேற்ற 1955-56 ஆண்டு முதன் முதலாக எல்லா ஏழைச்ச்சிறுவர் சிறுமியர்க்கும் இலவசக் கல்வி அளிக்க உத்தரவிட்டார்.

1960ஆம் ஆண்டில் 11 ஆவது வகுப்புவரை ஏழைப் பிள்ளைகள் அனைவருக்கும் இலவக் கல்வி அளிக்கக் காமராஜ் முடிவு செய்தார். அந்த ஆண்டே அதை அறிவித்தார். இந்தச் சலுகை பெறும் சிறுவர்க்ளின் பெற்றோர்களுக்கு வருடம் ரூபாய் 1, 200க்கும் குறைந்த வருமானம் இருக்க வேண்டும் என்று நிபந்தனை இதை 1962-63ஆம் ஆண்டு மீண்டும் திருத்தினார் 1,500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர் குழந்தைகளுனுக்கும் 11ஆவது வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்க உத்தரவிட்டார் இதுவன்றியும் ஜெகட் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்கள் ஊராட்சி மன்றங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கும் உயர் நிலைபள்ளி இறுதிவரை சம்பளம் கட்ட வேண்டிய அவசியமில்லை என்று உத்தரவிடப்பட்டது.

1956-57 முதலே ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் பொலிஸ் கான்ஸ்டேபிள்கள் ஹெட்கான்ஸ்டேபிள்ளய் கடைநிலை அரசாங்க ஏஊழியர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கு உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புவரை முழுசம்பளச் சலுகை அளிக்கப்பட்டது. அதற்கு அடுத்த ஆண்டு உயர் நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியரில் இலவசக் கல்வி பெறாமல் எஞ்சியுள்ளவர்கள் 100க்கு 17 பேர் மட்டுமே என்று தெரியவந்தது. இவர்களுக்கும் பரிகாரம் அளிக்கும் எண்ணத்துடன் எல்லோருக்குமே இலவசக் கல்வி என்னும் திட்டம் 1962 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

(தொடரும்)




கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய

## அலங்கார உற்சவம்

இரண்டாம் திருவிழா 31.07.2006

## கந்தனின் மூத்தோனே

உற்பவங்கள் உந்தனுக்கு நாளும் நடக்குமே
கற்பனைக் கெட்டாக் கணபதியே – அற்புதமாம்
உந்தன் திருநாமம் சொல்ல வினைபோகும்
கந்தனின் மூத்தோனே காண்

கவிஞர் துரையர்











யூனியன் அஷ்யூரன் காப்புறுதிக் கம்பனியின் இழப்பீட்டுக்கொடுப்பனவு வழங்கும் வைபவம் அண்மையில் வட்டுக்கோட்டை ஸ்கந்தா கல்வி நிலையத்தில் நடைபெற்றது. யூனியன் அசூரன்ஸ் அபிவிருத்தி உத்தியோகத்தர் கோ.சிறிவரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வினை யூனியன் அசூரன்ஷ் பிராந்திய முகாமையாளர் சி.என். மதிவதனன் மங் கள விளக்கேற்றி ஆரம்பிப்பதனையும் ஆயுட்காப்புறுதி இழப்பீட்டுக் கொடுப்ப னவை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலா நிதி திருமதி ராதினி காந்தனேசன் வாடிக்கையாளரான அமரர் தேவரஞ் சினின் தாயா ரிடம் கையளிப்பதனையும் யாழ். வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவர் இ.ஜெயராசா சிறப்புரையாற்றுவுதனையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-காரைநகர்செய்தியாளர்)

## நவோதய பாடசாலை அபிவிருத்தி மேற்பார்வைக்கு வலய இணைப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண உட்பட நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் நவோதயா திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் வகையில் சகல வலயக்கல்வி அலுவலக மட்டத்திலும் இணைப்பாளர் களை நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு மேற் கொண்டுள்ளது.

நவோதயா பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கும் வகையில் ஆண்டு தோறும் ஜுலை மாதம் நவோதயா பாடசாலை வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதன் பொருட்டு பிரதேச செயலக மட்டத்தில் தலா ஒவ்வொரு பாட சாலை தெரிவு செய்து அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் நாடாளவிய ரீதியில் தற்போது 378 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 32 நவோதயா பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

இவ்வாறு தெரிவு செய்யபட்ட பாடசாலைகளின் பௌதீக வள கட்டுமான அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, இணைப்பாடவிதான செயற்பாடுகளை கல்வியமைச்சு மேற்கொண்டுவருகின்றது. இந் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்யும் நோக்கத் துடன் வலய இணைப்பாளர்கள் நியமிக்சபடவுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-9)

# பிளேயரிடம் மன்னிப்பு கேட்டார் புஷ்

அமெரிக்கப் போர் விமானங்கள் பிரிட்டன் விமான நிலையத்தின் வழியாக, பதுங்கு குழிகளை அழிக்கும் குண்டுகளை இஸ்ரேலுக்கு கொண்டு சென்றபோது முறையான நடைமுறைகளை பின்பற்றாததற்கு அதிபர் புஷ் மன்னிப்பு கேட்டுள்ளார். இஸ்ரேல் தற்போது லெபனான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. பதுங்கு குழிகளை அழிக்கும் குண்டுகளை வழங்கும்படி அமெரிக்காவுக்கு இஸ்ரேல் கோரிக்கை விடுத்தது. இதையடுத்து, அமெரிக்கப் போர் விமானங்கள் இத்தகைய குண்டுகளை இஸ்ரேலுக்கு கொண்டுசென்றது. இது கடந்த வாரம் நடந்தது.

செல்லும் வழியில் பிரிட்டன் ஸ்காட்லாந்தில் உள்ள பிரெஸ்ட்விக் விமான நிலையத்தில் அமெரிக்கப் போர் விமானங்கள் எரிபொருளை நிரம்பிக்கொண்டன. அப்போது அமெரிக்கப்போர் விமானங்கள் முறையான நடைமுறையை பின்பற்றவில்லை என்று பிரிட்டன் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்



டன. இதையடுத்து இதுகுறித்து பிரிட்டன் பிரதமர் டோனிப் பிளேயரிடம் அமெரிக்க அதிபர் புஷ் மன்னிப்பு கேட்டார் என்று டோனிப் பிளேயரின் உதவியாளர் தெரிவித்துள்ளார். பிரச்சினை ஏற்பட்டதற்கு வருந்துகிறேன் என்று அதிபர் புஷ் தெரிவித்ததாக அந்த உதவியாளர் கூறியுள்ளார். (அ)



மேற்கு கரை நகரான நெபுலஸ் இல் வெள்ளிக்கிழமை தொழுகைக்கு சென்ற பாலஸ்தீனர்கள், அமெரிக்க இஸ்ரேலிய கொடிகளை காலால் மிதித்து சென்றனர்

# கலிபோர்னியாவில் கடும் வெப்பம் 38 பெண்களும் 88 ஆண்களும் பலி

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் தற்போது கடும் வெயில் நிலவி வருகிறது. இந்த வெப்பத்தை தாங்காமல் இறந்தவர்களின் எண்ணிக்கை 126 ஆக உயர்ந்துள்ளது. இறந்தவர்களில் 88 பேர் ஆண்கள், 38 பேர் பெண்கள் என மாகாண நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் பெரும்பான்மையானோர் வயதானவர்கள். கடந்த ஒரு வாரமாக கலிபோர்னியா மாகாணத்தில் 44.5 டிகிரி செல்சியஸ் (112.1 டிகிரி பாரன்ஹீட்) வெயில் நிலவிவருகிறது. 1898ஆம் ஆண்டுக்கு பிறகு இதுபோன்று தொடர்ச்சியாக பல நாட்களுக்கு வெயில் நீடிப்பது இதுவே முதல் முறை என்று வானிலை ஆய்வு மையம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவசரகால சேவைகள் அளிக்கும் பிரிவின் இயக்குனர் ஹென்றி ரென்டீரியர் கூறுகையில் கலிபோர்னியாவின் மத்திய பகுதியில் இது போன்ற வெப்பநிலை காணப்படுவது சகஜமே. ஆனால் தொடர்ச்சியாக 11 நாட்களுக்கு நீடிப்பது இதுவே முதல்முறை என்றார்.

கடுமையான வெப்பநிலை நிலவுவதால் மக்களின் மின்சார தேவையும் அதிகரித்துள்ளது. ஒரே நேரத்தில் அனைவரும் மின் சாதனங்களை பயன்படுத்துவதால் கடுமையான மின்வெட்டும் ஏற்பட்டுள்ளது. இது கலிபோர்னியாவை சேர்ந்த 20 இலட்சம் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# லெபனானில் தொடர் குண்டுவீச்சு தண்ணீர் இன்றி 8 இலட்சம் பேர் தவிப்பு

(பெய்ரூட்)

இஸ்ரேல் இராணுவத்தினர் 2 பேரை லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் கடத்திச்சென்றதை தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டுவீசி தாக்குதல் நடத்தி வருகிறது. 19ஆவது நாளாக இன்றும் தாக்குதல் நீடித்து வருகிறது. லெபனானின் தெற்கு பகுதியில் உள்ள நகரங்களில் இஸ்ரேலின் தரைப்பட பீரங்கி தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் நகரின் முக்கிய சாலைகள், பாலங்கள் தகர்க்கப்பட்டன. ஏராளமான கட்டடங்கள் தரைமட்டமானது. தலைநகர் பெய்ரூட்டை சுற்றியுள்ள பகுதிகள் விமானங்களின் குண்டு வீச்சில் எரிகின்றன.

லெபனானின் தெற்கு பகுதியில் அடெய்சி கிராமத்தில் இஸ்ரேல் குண்டு வீசியதில் ஐ.நா.அமைதிப்படை முகாம் இடிந்து தரைமட்டமானது. இதில் தங்கி இருந்த அமைதிப்படை வீரர்களில் 2 இந்திய வீரர்களும் காயம் அடைந்தனர். ஆபத்தான நிலையில் அவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த முகாமில் உள்ள கண்காணிப்பு கோபுரம் முற்றிலும் சேதம் அடைந்தது. ஏற்கனவே கடந்த வாரம் ஹோலா பகுதியில் நடந்த தாக்குதலில் அமைதிப்படையை சேர்ந்த இந்திய வீரர் ஒருவர் காயம் அடைந்தார்.

இஸ்ரேல் விமானங்கள் குண்டுவீசியதில் லட்சக்கணக்கான வீடுகள் இடிந்து தரை மட்டமாகிவிட்டன. வீடுகளை இழந்தவர்கள் அகதிகளாக முகாம்களில் தங்கியுள்ளனர். உண்ண உணவு, குடிக்க தண்ணீர் இன்றி 8 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தவிக்கிறார்கள். உலக நாடுகள் அனுப்பிவைத்த உணவுப் பொருட்களையும் அந்த பகுதிகளுக்கு அனுப்பிவைக்க முடியவில்லை. அந்த அளவுக்கு சாலைகள் சேதம் அடைந்துள்ளன. இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஹிஸ்புல்லா இயக்கத்தினரும் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறார்கள். நீண்ட தூரம் சென்று டெல் அவில் உட்பட பல்வேறு நகரங்களை தாக்கும் நவீன ஏவுகணைகளை ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். (அ)

# சனிக்கிரகச் சந்திரனில் ஏரிகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர் தகவல்

சனிக் கிரக சந்திரனில் ஏராளமான ஏரிகள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார். பூமிக்கு அருகில் சந்திரன் இருப்பது போல சனி கிரகத்தின் அருகிலும் சில சந்திரன்கள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள். அந்த சந்திரன்கள் பற்றி ஆராய கடந்த 1997ஆம் ஆண்டில் காசினி-ஹுய்ஜென்ஸ்பீ என்ற செயற்கை கோள் அனுப்பப்பட்டது.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், ஐரோப்பிய வான வெளி ஆராய்ச்சி ஏஜென்சி, இத்தாலி வான வெளி ஆராய்ச்சி ஏஜென்சி ஆகியவை கூட்டாக இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த 2004ஆம் ஆண்டில், சனி கிரகத்தின் சந்திரனான பிடைட்டான் பீஐ அடைந்த இந்த செயற்கை கோள் அங்கிருந்து பல அரிய தகவல்களை அனுப்பி வருகிறது. அந்த சனி கிரகம் பூமியைப் போல் உள்ளது என்றும் அங்கு உயிரினங்கள் வசிக்கமுடியும் என்றும் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். அங்கு மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும், அடுத்த சில ஆண்டுகளுக்கு இந்த மழை நீடிக்கும் என்றும், வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அங்கு ஏராளமான ஏரிகள் இருப்பதாக இப்போது விஞ்ஞானிகள் மேலும் ஒரு புதிய தகவலை தெரிவித்து இருக்கிறார்கள் அமெரிக்க நாட்டை சேர்ந்த கலிபோர்னியா மாகாணத்தில் பசடெனா என்ற நகரத்தில் பிநாசாபீ வானவெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு மையம் ஒன்று உள்ளது. இதன் ரேடார் குழு துணைத் தலைவர் ஸ்டீவ் வால் இது பற்றி கூறியதாவது,

சனி கிரக சந்திரன் டைட்டானில் ஏராளமான ஏரிகள் உள்ளன. அவை கொஞ்சம் பிஈத்தேன்பீ கலந்த வாயுவும் அதிக அளவில் பிமீத்தேன்பீ வாயுவும் கலந்து அதன் மூலம் உருவான ஏரிகள் ஆகும். பிமீத்தேன்பீ மழையும் அங்கு பெய்யும் வெள்ளை நிற கிறிஸ்டல் மணல் குவியல்கள் உள்ளன. குளிர்ச்சியான நிலவில் இருப்பதைப் போன்று அங்கும் மங்கலான புகை மண்டலம் காணப்படுகிறது.

பூமிக்கு அடுத்தபடியாக இன்னொரு கிரகத்தில் ஏரிகள் இருப்பதாக கண்டறியப்பட்டு இருப்பது பெரிய ஆராய்ச்சியின் முடிவு ஆகும். இப்படி அதிக எண்ணிக்கையில் ஏரிகள் இருப்பதை காசினி செயற்கை கோள் ராடார் அனுப்பி இருக்கும் கறுப்பு நிற படங்களில் இருந்து தெரியவந்துள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (அ)

# யூரேனியம் திட்டத்தை நிறுத்தாவிட்டால் அரசியல் பொருளாதார தடை விதிக்கப்படும்

## ஈரானுக்கு ஐ.நா.பாதுகாப்புச்சபை எச்சரிக்கை

ஈரானுக்கு மிரட்டல் விடுக்கும் தீர்மானத்தை ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் பிரான்ஸ் கொண்டு வந்துள்ளது. யுரேனியம் செறிவூட்டும் திட்டத்தை ஈரான் ஆகஸ்ட் 31ஆம் திகதிக்குள் நிறுத்த வேண்டும் இல்லாவிட்டால் அரசியல் பொருளாதார தடை விதிக்கப்படும் என்று அந்த தீர்மானத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. 15 உறுப்பினர் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் இந்த மாத தலைவர் பிரான்ஸ் தூதர் ஜியான் மார்க் டிலா சபீர் ஆவார்.

ஐ.நா.உயரதிகாரிகள், ரத்து அதிகாரம் கொண்ட அமெரிக்கா, சீனா, ரஷியா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நர்டுகளின் சார்பில் நியூயோர்க்கில் உள்ள உயரதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்திய பின்னர் ஈரானுக்கு மிரட்டல் விடுப்பது தொடர்பான தீர்மானத்தை பிரான்ஸ் கொண்டுவந்துள்ளது. இந்த நிலையில் வாக்கெடுப்புக்கு முன்னதாக தீர்மானத்தில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது என்று பிரான்ஸ் தூதர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தீர்மானத்தில் பெரிய திருத்தம் ஏதும் செய்ய வேண்டும் என்று ரத்து அதிகாரம் கொண்ட உறுப்பு நாடுகள் விரும்பினால் தீர்மானம் நிறைவேறுவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தீர்மானத்தை ஏற்பதை தவிர ஈரானுக்கு வேறுவழியில்லை. இல்லாவிட்டால் பொருளாதார தடையை எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்று அமெரிக்க தூதர் ஜான் பேல்டன் தெரிவித்தார். தீர்மானத்தை ஈரான் ஏற்க மறுத்தால் அதுபற்றி விவாதிக்கப்படும் என்று ரஷிய தூதர் செர்கின் தெரிவித்தார். தீர்மானத்தை ஏற்று அதன்படி ஈரான் செயல்படும் என்று பிரிட் டிஷ் தூதர் எமிர் ஜோன்ஜ் நம்பிக்கை தெரிவித்தார். (அ)



லெபனான் எல்லையில் இருந்தபடி நள்ளிரவில் இஸ்ரேலிய படையினர் தரையில் படுத்து தாக்குதலில் ஈடுபட்டுள்ள காட்சி.

# சீன இரசாயன தொழிற்சாலை வெடி விபத்தில் 22 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் கிழக்கு பகுதியில் இருக்கும் ஷியாங் என்ற இடத்தில் உள்ள இரசாயன தொழிற்சாலையில் வெடிவிபத்து ஏற்பட்டது. இரசாயன கலவை குழாய் வெடித்ததால் தீ பிடித்துக்கொண்டது. இதில் 22 பேர் பலியானார்கள். தொழிற்சாலையின் தலைவர் பொது மேலாளர் உட்பட 28 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து அந்த பகுதியில் குடியிருந்த சுமார் 7 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

கட்டுப்பாடான சரியான வழியில் தம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும். இல்லை என்றால் நேர் மாறான விளைவுகள்தான் உண்டாகும்.
-பிளேட்டோ

வலம்புரி

# யுத்தத்தை ஆரம்பிப்பதே அரசின் இலக்காகும்

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு 'தேனகம்' மாநாட்டுச் செயலகம்மீது கிபீர் விமானம் நடத்திய குண்டுத் தாக்குதலில் எட்டுப் போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் தமிழர் தாயகத்தில்-விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விமானக் குண்டுத் தாக்குதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய போன்ற இனவாதக் கட்சிகளைத் திருப்திப்படுத்துவதே இத் தாக்குதலின் நோக்காகும்.

தமிழர் தாயகத்தில் இராணுவத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்பது பேரினவாதிகளின் நிபந்தனை. யுத்தநிறுத்த உடன்படிக்கையை இல்லாதொழிப்பதன் ஊடாக தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கையை உச்சப்படுத்துவது விமானக் குண்டுத் தாக்குதலின் மற்றொரு இலக்காகும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக யுத்தநிறுத்த உடன்படிக்கையை விடுதலைப்புலிகளே மீறியதாகக் காட்டி போரை ஆரம்பிப்பதும் அவரின் நரித்தந்திரமாகும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே விமானக் குண்டுத் தாக்குதலை அரசு மேற்கொண்டு வருகிறது. விமானத் தாக்குதல் தொடர்ந்தால் பதில் தாக்குதல் நடக்கும் என விடுதலைப்புலிகள் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளனர்.

• இந்நிலையில் அரசு மீண்டும் மீண்டும் விமானத் தாக்குதல் நடத்துவதானது, விடுதலைப்புலிகளைச் சீண்டி யுத்தத்தைஆரம்பிப்பதாகும்.

இதற்குள்ளும் அரசின் இருவேறு கபடத்தனம் மறைந்திருப்பதை உணர முடியும். அதாவது, விமானத் தாக்குதல் நடத்துவதன் ஊடாக விடுதலைப்புலிகளின் யுத்த விமான எதிர்த்திறனை அளவிட்டுக் கொள்வதும், அதனை பிரசாரப் பொருளாக எடுத்துக் கொண்டு உலக நாடுகளின் செவிகளில் உரக்கக் கத்தி,

அந்தோ! விடுதலைப்புலிகளின் அதீத வளர்சியைப் பாருங்கள். இவ்விதம் அதீத வளர்ச்சி கண்டுள்ள விடுதலைப்புலிகளால் வல்லரசுகளுக்கே ஆபத்தெனக் கூறுவது.

மற்றையது, விடுதலைப்புலிகளே யுத்தத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்களுக்கு சமாதானத்தில் விருப்பமில்லை. அரசு யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்கவே விரும்புகிறது.

அரசின் சமாதானக் கதவு திறந்தே இருக்கின்றன. எனினும் விடுதலைப்புலிகள் சமாதானத்தை விடுத்து யுத்தத்தையே விரும்புகின்றனர் என உலக நாடுகளிடம் கூறி அவற்றின் இரக்கத்திற்கு ஆளாகுவது. இதற்கானதே இலங்கை அரசின் விமானக் குண்டுத் தாக்குதலாகும்.

எதுவாயினும், இலங்கை அரசு ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது விமானக் குண்டுத் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்பட்டால் யுத்தநிறுத்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும் என்பதே அதுவாகும்.

அவ்வாறானதோர் நிலை ஏற்பட்டு விட்டால் மீண்டும் யுத்தநிறுத்த உடன்படிக்கை சாத்தியமாகும் என்ற நினைப்பு அரசிடம் அறவே இருக்கலாகாது. யுத்தநிறுத்த உடன்படிக்கை இரத்தாகி விட்டால் குண்டுகள் தமிழர் தாயகத்தில் மட்டும்தான் வெடிக்கும் என சிங்கள மக்கள் எண்ணுவார்களாயின் அது மிகப் பெரும் தவறாகும்.

எனவே விமானக் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக யுத்தம் ஒன்று ஏற்பட்டால் தென் பகுதியின் நிலை எப்படியிருக்கும் என அரசு ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பது வருமுன் காக்கும் செயலாகும்.

# மக்கள் சமாதானத்தை வேண்டி நிற்கிறார்கள் ஆனால் அரசு போரைத் தொடங்கிவிட்டது

## ஜெயானந்தமூர்த்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் போரைத் தொடங்கிவிட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி குற்றம் சாட்டி யுள்ளார்.



இது குறித்து அவர் கூறியுள்ளதாவது,

சர்வதேச சமூகத்திற்கும் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமாதானத்தில் அரசு அக்கறையுடன் இருப்பதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் போர்நிறுத்தத்தை மீறுகின்றனர். என்றும் கூறிக்கொண்டு தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தி அரசாங்கம் போர்நிறுத்தத்தை மீறுகிறது.

கடந்த சில நாட்களாக விமானப்படையினர் கிபீர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இராணுவத்தின் இச்செயற்பாடு பாரிய பின்விளைவை ஏற்படுத்தும் செயலாகும். தமிழீழ விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை மிக இறுக்கமாக கடைப்பிடிக்கின்றனர். இவற்றை மீறி மஹிந்த ராஜபக்ஷ இரு முகங்களைக் கொண்டு அரசாங்கத்தை நடத்துகின்றார்.

அரசாங்கம் உண்மையில் போரைத் தொடங்கிவிட்டது. இதனை சர்வதேச சமூகம் உணர்ந்துகொள்ளவேண்டும் தற்போதும் தமிழ்மக்கள் சமாதானத்தை வேண்டி நிற்கிறார்கள்.

ஆனால் தமிழீ விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகம் புறந்தள்ளிவிட்டு செயற்படுவதை மீளாய்வு செய்ய வேண்டும் என்றார் எஸ்.ஜெயானந்தமூர்த்தி. (அ)

# மஹிந்தவும் மூத்த அமைச்சர்களும் —பரஸ்பரம் குற்றச் சாட்டுகள்—

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ மீது அவரது அமைச்சரவையினர் கடும் அதிருப்தியில் இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டிய அவசர அமைச்சரவைக் கூட்டத்தில் தங்களது அதிருப்தியை அமைச்சர்கள் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

நாட்டினது தேசியப் பிரச்சினைகளை அரசாங்கம் கையாளும் விவாதம் ஏற்புடையது அல்ல என்று விமர்சித்த அமைச்சர்கள் இத்தகைய நிலைமைகளில் தெளிவான உறுதியான முடிவையே எடுக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

ஆனால் அமைச்சர்களின் கருத்தை நிராகரித்த மஹிந்த ராஜபக்ஷவோ அமைச்சர்கள் மீது குற்றம் சாட்டியுள்ளார் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றபோது மூத்த அமைச்சர்கள் கூட அரசாங்கத்தை ஆதரிப்பதில்லை என்றும் அரசாங்கத்தை சீர்குலைப்பதற்கான வேலைகள் நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அதேபோல் மஹிந்தவின் அரசாங்கத்தில் அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷ மற்றும் மஹிந்தவின் இணைப் பாளர் சஜின் வாஸ்குணவர்த்தன ஆகியோர் சர்வாதிகாரமாக அமைச்சர்களைக் கலந்தாலோசிக்காமல் முடிவெடுப்பது குறித்தும் மூத்த அமைச்சர்கள் பலரும் கடும் அதிருப்தியில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தின் இராஜதந்திர ரீதியான செயற்பாடுகளில் மங்கள சமரவீரவின் வெளிவிவகார அமைச்சை பசில் ராஜபக்ஷ குழுவினர் புறக்கணித்து வருவது தொடர்ச்சியாக நடைபெறுகின்றது என்றும் மூத்த அமைச்சர் ஒருவர் கூறினார்.

விடுதலைப்புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்காக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பசில் ராஜபக்ஷ குழுவினர் கூறுகின்றனர்.

ஆனால் வெளிநாட்டு தூதுவர்கள் கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொள்வதை கடந்த காலங்களில் எதிர்த்து வீதிப் போராட்டங்களை நடத்திய பேரினவாதிகள் கூட இது விடயத்தில் அமைதி காப்பதாகவும் கூறப்படுகிறது.

அயர்லாந்தின் மார்ட்டின் மக்கின்ஸின் கிளிநொச்சி பயணத்தின் போதும் வெளிவிவகார அமைச்சிடம் ஆலோசிக்காமலேயே சாஜின்வாஸ் குணவர்த்தனவே மஹிந்தவின் உத்தரவுப்படி ஏற்பாடு செய்ததாக சர்ச்சை எழுந்தது.

தற்போது பிரித்தானிய பிரதித் தூதுவரின் கிளிநொச்சி பயண ஏற்பாட்டிலும் வெளிவிவகார அமைச்சு புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிஹக்காரவை தொடர்பு கொண்டால் அனைத்து கேள்விகளையும் சமாதான செயலகத்திடம் கேளுங்கள் என்று கூறுகிறார்.

ஆனால் ஸ்ரீலங்கா சமாதான செயலகத்தின் பாலித கோகென்னவோ பிரித்தானிய பிரதித் தூதுவரின் கிளிநொச்சிப் பயணமானது வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது என்கிறார். (அ)

# நந்த மல்லவராச்சியின் பணிக்காலம் நீடிப்பு பிரதி இராணுவத் தளபதி பதவி நீடிக்கவில்லை

(கொழும்பு)

இலங்கை இராணுவ மேஜர் ஜெனரல் நந்தமல்ல வராச்சியின் பணிக்காலம் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதி இராணுவத்தளபதியாக அவர் நீடிக்கப்பட வில்லை.



இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா தாக்குதலில் சிக்கி சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை பதில் இராணுவத் தளபதியாக நந்த மல்லவராச்சி பணியாற்றினார். எதிர்வரும் ஓகஸ்ட் 1ஆம் திகதி அவர் ஓய்வு பெறுகிறார் ஓகஸ்ட் 2ஆம் திகதி ஓய்வு பெறும் வயதான 55 ஐ அவர் எட்டுகிறார். தற்போது பிரதி இராணுவத் தலைமை அதிகாரியாக உள்ள மேஜர் ஜெனரல் சியமன் குலதுங்க தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் அவர் எதிர்வரும் 5 மாதங் களில் ஓய்வு பெற உள்ளார். மஹிந்தவின் புதிய விதிகளின் மூலம் அவருக்குப் பணிநீட்டிப்பு வழங்கப்பட்டாலும் தற்போதைய பொறுப்பில் அவர் நீட்டிக்கமாட்டார்.

தற்போது கூட்டு நடவடிக்கைக்ளின் தலைமையகத்தில் அதிகாரிகள் இயக்குநர் நாயகமாகவும் இராணுவ தொண்டர் படையின் தளபதியாகவும் உள்ள மேஜர் லோரன்ஸ் பெர்னாண்டோ பிரதி தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் வன்னியில், 56ஆம் டிவிசன் தளபதியாக இருந்தவர் மேஜர் லோரன்ஸ் பெர்னாண்டோ.

கிழக்குப் பகுதி தளபதியாக உள்ள நிசங்க விஜயசிங்க வின் இடத்துக்கு மேஜர் ஜெனரல் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார் அவர் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 28ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். (அ)

# பெற்றோலிய வள ஆகழ்வாய்வுக்கு மத்திய கிழக்கின் வழிகாட்டல் பெறப்படும்

(கொழும்பு)

நாட்டின் பெற்றோலிய வளங்களை அகழ்ந்தெடுப்பதற்கான செயற்பாடுகள் குறித்த தொழில்நுட்ப வழிகாட்டல் எகிப்து மற்றும் சவுதி அரபிய நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப் படுமென்று பெற்றோலிய வள அபிவிருத்தியமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேற்குறிப்பிட்ட நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திப்பட்டுள்ளது. அடுத்த வாரம் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராய்வதற்கென எகிப்து மற்றும் சவுதி அரபிய விசேட பிரதிகள் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

பெற்றோலியம் அகழ்ந்தெடுப்பதற்கான கேள்விப் பத்திரம் செப்டெம்பர் மாதமளவில் கோரப்படவுள்ளது. (அ-9)

# கிளைமோரிலிருந்து தப்பிக்க இராணுவத்துக்கு சீனவாகனங்கள்


(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் கிளைமோர் தாக்குதல்களிலிருந்து இராணுவத்தினர் தப்பி பயணிக்க சீனாவில் தயாரிக்கப்பட்ட 25 நவீன பீ.ரி.ஆர் வாகனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு முடிவடைவதற்குள் படை வீரர்கள் பயணிப்பதற்கென 75 யுனிகொன் வாகனங்கள் தயாரிக்கப்படவுள்ளதாகவும் இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கனமான தக்டுகளைப் பயன்படுத்தி இந்த யுனிகொன் வாகனங்கள் தயாரிக்கப்படவுள்ளன. கிளைமோர் குண்டுகளினால் இந்த வாகனங்கள் பாதிப்படைய மாட்டாதென்பதால் இனிமேல் வாகனத் தொடரணிகளின் போது பலபகுதிகளுக்குப் பதிலாக இந்த பீ.ரி.ஆர் அல்லது யுனிகொன் வாகனங்களே பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



உணர்ச்சி வேகம் தவறு செய்யத் தூண்டும். ஆனால் விவேகத்தினாலும் பயிற்சியாலும் தெய்வ பகதியாலும் உணர்ச்சிக்குப் பலியா காமல் சம நிலையில் இருக்கப் பழகவேண்டும்.

## ஆற்றைத் திறந்து விட்டால் தாக்குதலை நிறுத்துவோம்

# விமானத் தாக்குதல் நடாத்த விடுதலைப்புலிகளே காரணம்

## பி.பி.ஸிக்கு அமைச்சர் ரம்புக்வெல பேட்டி



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை போர்நிறுத்த மீறல் எனக் கூறமுடியாது. இவ்வாறு தேசிய பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

நாம் வேண்டும் என்று தாக்குதலை மேற்கொள்ளவில்லை. விடுதலைப்புலிகளே எம் மீதுஅதைத் திணித்துள்ளனர். நாமாக இதனைச் செய்யவில்லை. 15 ஆயிரம் பேர் தண்ணீர் கிடைக்காமல் பாதிப்படைந்துள்ளனர்.

அவர்களின் விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அந்த நிலையை நீக்க வேண்டியது அரசாங்கத்தினது கடமையாகும். ஆகவே இதில் யுத்தநிறுத்த மீறல்கள் இடம் பெற்றிருந்தால் அதனை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் முடியும் எனவும் கூறிய கெஹலிய ரம்புக்வெல விடுதலைப் புலிகள் உடனடியாக ஆற்றைத் திறந்து விடுவார்களாயின் நாமும் அத்தருணமே அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்தி விடுவோம்.

விடுதலைப்புலிகளின் குறைகளை 24 மணி நேரத்திற்குள் பரிசீலிப்பதற்கு அரசு தயாராகவுள்ளது. அணைக் கட்டைத் திறந்து தண்ணீரைப் பெறுவதற்கு எந்தளவு தூரம் போவதற்கும் எதைச் செய்வதற்கும் அரசு தயாராகவுள்ளது.

இராணுவத்தினர் முன்னேறிச்சென்று அணையைத் திறப்பதற்கு பத்து நிமிடங்கள் போதும். ஆனால் அந்தப் பகுதிகளில் விடுதலைப்புலிகளினால் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

எனவே நாம் அதனை முதலில் அகற்றி ஆகவேண்டும் எனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.(ந-5)

## ஆட்டோ சாரதி கைது

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக வீதிக் கடமையில் நின்ற இராணுவத்தினர்மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலையடுத்து அப்பகுதியில் நின்ற ஆட்டோ சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பன்னைக்கட்டை வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த சிவராஜா நாதன் (வயது-21) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார். 15,52,101,133)







யாழ்.மறை மாவட்ட பேராயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களை 'ஆயர் பணி' வெள்ளிவிழா நேற்று யாழ்ப்பாணம் புனித மரியன்னை தேவாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் இறை வழிபாடு செய்வதைப் படங்களில் காணலாம்.

### பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ

## யாழ்.ஆயரின் வெள்ளிவிழா நேற்று சிறப்புடன் நடந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்ட பேராயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களின் 25 வருட சேவையைப் பாராட்டி நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் புனித மரியன்னை தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது.

முன்னதாக பேராயரை அவரது இல்லத்திலிருந்து பல நூறுக்கணக்காணஅருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் மற்றும் ஆயிரக் கணக்காண பொதுமக்கள் புடைசூழ ஊர்வலமாக தேவாலயத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதில் பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மாரியோ கெனற், கொழும்பு பதில் ஆயர் லியோனி பெர்னாண்டோ, திருமலை மாவட்டப் பேராயர் வின்சன் சுவாம்பிள்ளை, மன்னார் மறை மாவட்டப் பேராயர் இராஜப்பு ஜோசேப் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

இதனை விட யாழ்.மாவட்டத் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், யாழ். மாநகரசபை ஆணையாளர் உள்ளிட்ட பலரும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.(ந-5)

## விமானக் குண்டுத் தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகள்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு கரடியனாறு தேனகம் மாநாட்டுச் செயலகம் மீது நேற்று முன்தினம் படையினரால் நடத்திய விமானக் குண்டுத் தாக்குதலில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

அவர்களின் பெயர் விபரங்களைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர். அதன் விபரம் வருமாறு;

- லெப்.கேணல் தமிழ்ச்செல்வன் (ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை , மட்டக்களப்பு)
- மேஜர் அரிகரன் (கணபதிப்பிள்ளை புண்ணியமூர்த்தி,மட்டக்களப்பு)
- மேஜர் கவி (குமாரலிங்கம் ரசுணன், மட்டக்களப்பு)
- கப்டன் ஊரவன் (வேலாயுதம் சசிக்குமார், புலோலி மேற்கு, புலோலி)
- கப்டன் அனலி/ செஞ்சுடர்(ஆனந்தராஜா விஜயானந், புதுக்குடியிருப்பு)
- 2-ம் லெப். சுஜீவன்(சுனில் கஜேந்திரன், வாழைச்சேனை)
- 2-ம் லெப். மதுசுதன் (இமானவேல் அருள்ராஜ், கொக்கட்டிச்சோலை)
- கிராமியப் படைவீரன் லோகிதன்(கந்தசாமி மேகநாதன்,மட்டக்களப்பு)

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட எட்டு மாவீரர்களின் வித்துடல்கள் நேற்று தாண்டியடி, தரவை மாவீரர் துயிலும் இல்லங்களில் முழு இராணுவ மரியாதையுடன் நேற்று விதைக்கப்பட்டது. (ந-5)

### போர் நிறுத்த உடன்பாடு...

கடிதத்தின் விபரம் வருமாறு;

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகள் மீது இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதானது விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் போர்ப்பிரகடனத்திற்கு சமமானது.

ஆகையால் யுத்த நிறுத்த ஒப்பந்தமானது எந்த வகையிலும் நடைமுறையில் இல்லையென்தை கண்காணிப்புக்குழு அறிவிக்க வேண்டிய உரிய நேரமிது.

மாவிலாறுப் பகுதியை நோக்கி தரை வழியாகவும் இராணுவத்தினர் நகர்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

எமது மாவிலாறுப் பகுதிக்குள் இராணுவத்தினர் நுழைந்தால் நாம் பதிலடி நடவடிக்கையை மேற்கொள்வோம் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

மாவிலாறு அணைக்கட்டு மதகு திறக்கப்படாமையினால் மூவாயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் இராணுவத்தினரது எறிகணை மற்றும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களால் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இது விடயத்தில் தீவிரமாக பரிசீலிக்கவேண்டுமென்றும் அக் கடிதத்தில் எழிலன் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

### நல்லூர்க்...

கூறப்படுகிறது.

இதேவேளை திருவிழாவை முன்னிட்டு ஆலய சூழலில் யாழ்.மாநகர சபைப்பணியாளர்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் உற்சாகத்துடன் செயற்பட்டன. (ந)

### யாழ்.பாடசாலை...

என்பது கேள்விக்குறியாகவுள்ள நிலை யில் மேற்படி சம்பவம் மேலும் அச்சம் ஊட்டுவதாயுள்ளது.

ஆயுதங்கள் அற்ற, அச்சுறுத்தல் அற்ற சூழலில் கற்கத் துடிக்கும் மாணவர்களின் வேட்கைக்கு தினமும் தீர்க்கப்படும் வேட்டுக்கள் அவர்களின் எதிர்காலத்தினை சூனியமாக்கி நிற்கிறது.எனவே உப அதிபர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் அனைவரும் கற்றல் செயற்பாடுகளைப் புறக்க ணித்து தமது எதிர்ப்பைக்காட்டுமாறு வேண்டுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உப அதிபர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும், இன்றைய பகிஷ்கரிப்புப்போராட்டத்தை வலுப்படுத்தியும் யாழ். இந்துக்கல்லூரி மாணவர் முதல்வர் சபை, யாழ்.இந்துக்கல்லூரி தமிழ் மாணவர் ஒன்றியம் ,யாழ்.மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் என்பனவும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. (ந-5)

### பருத்தித்துறை...

பழைய பஸ் நிலையத்தில் வைத்து தலையாட்டி முன் நிறுத்தப்பட்டபின் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இராணுவத்தினர் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட வேளை ஒரு இராணுவச் சிப்பாய் காயமடைந்ததே சுற்றிவளைப்பிற்கான காரணம் எனத் தெரியவந்துள்ளது.சுற்றிவளைப்பின்போது எவரும் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்படவில்லை. (ந-52,101)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.